பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 20 புதன்கிழமை 06.11.2019 கதிர் 01

**இது ரகசியம் அல்ல!**

ஊடகவியலாளர் என்ற முறையில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் மீது சில சமயங்களில் எனக்கு எரிச்சல் வருவதுண்டு.

யாராவது ஊடகவியலாளர்கள் அவரிடம் பேட்டி என்று கேட்டால் – அதுவும் பக்கம் 02 »

# தெற்கை அதிரவைத்த சந்திரிகாவின் மாநாடு!

## குழப்பத்தில் மஹிந்த, மைத்திரி தரப்புகள்

கொழும்பு, நவ. 06

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட மாநாடு தென்னிலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இரு வாரங்கள் உள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கும் போராட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஈடுபட்டுள்ளார். பக்கம் 03 »



## ரெலோ இன்று தீர்மானம்

கொழும்பு, நவ. 06

ஜனாதிபதித் தேரதலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது குறித்து நாம் கட்சியாக இன்னமும் தீர்மானம் ஒன்றை எடுக்க பக்கம் 02 »

காலைக்கதிர்
Kalaikathir

## அகவை மூன்று நிறைவு

உங்கள் காலைக்கதிருக்கு இன்று அகவை மூன்று பூர்த்தியாகின்றது. நான்காம் ஆண்டில் அது காலடி எடுத்து வைக்கின்றது.

அச்சு ஊடகமாகப் பிறப்பெடுத்த உங்கள் 'காலைக்கதிர்' இன்று புதிய நவீன தொழில்நுட்பத்தைத் தன்னகத்தே வரித்துக் கொண்டு இணைய ஊடகமாக வலைத்தளத்திலும், 'வட்ஸ்அப்', 'வைபர்', மின்னஞ்சல்', 'முகநூல்' போன்றவை வழியாகவும் விடிகாலையிலேயே பல்லாயிரக் கணக்கான வாசகர்களாகிய உங்கள் கைகளில் நாள் தவறாமல் தேடி வருகின்றது என்பது நீங்களும் நாங்களும் மகிழ்வுடன் திருப்திப்படக்கூடிய அனுபவமாகும்.

ஆரவாரம் இல்லாமல், தடல்புடல் கொண்டாட்டங்களை முன்னெடுக்காமல் – எம்மை வாழ்த்தும் பந்தாச் செய்திகளை நாமே தேடிப் பிடித்து அள்ளிக் கொட்டாமல் – சிறப்பிதழ் என்ற பெயரில் எம்மை இன்னொருவர் வாழ்த்துவதற்கு எவரிடமும் விளம்பரக் கட்டணம் அறவிடும் 'வர்த்தகம்' பண்ணாமல் – எமக்கு நிதி செலுத்தி, எம்மை வாழ்த்துமாறு விளம்பரதாரர்களை வற்புறுத்தாமல் – மூன்றாம் ஆண்டு நிறைவை அடக்கமாகவும், பொறுப்புணர்வோடும், அமைதியாகவும் கொண்டாடுகின்றோம்.

இந்த மூன்றாண்டுகளில் 'காலைக்கதிர்' பெற்ற அனுபவப் பாடங்கள் பலப் பல. கிடைத்த பட்டறிவு ஏராளம். எதிர்கொண்ட அழுத்தங்கள், சிக்கல்கள், நெருக்கடிகள், நெருக்குதல்கள், பின்னடைவுகள், கஷ்டங்கள், துன்பங்கள் அனேகம்.

'காலைக்கதிர்' நாளிதழ் மலர்வை ஒட்டி முதல்நாள் மாலை இடம்பெற்ற பொதுநிகழ்வின் போது பிரசுரமான 'விடியல்வீச்சு' சிறப்பிதழில் நாம் செய்து கொண்ட நமது 'பிரதிக்ஞை' என்ற கொள்கைக் கோட்பாடுப் பிரகடனத்தை மீண்டும் ஒரு தடவை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.

'உண்மை – நேர்மை – பக்கச்சார்பின்மை' – என்ற தாரக மந்திரத்தை வரித்துக்கொண்டு, ஒரு புதிய – நீதி நாடிய – சீரிய – ஊடக தர்மத்தை தனது பாதையாக வகுத்துக் கொண்டு, நமது இனத்தின் விடியலுக்காகவும், உயர்ந்த சமூக மாற்றத்திற்காகவும், இன, மத நல்லிணக்கத்திற்காகவும் அர்ப்பணிக்கும் வகையில் 'காலைக்கதிர்' தவறாது பணியாற்றும் – என்று எமது உயிர்ப்பு வேளையில் பிரதிக்ஞை செய்திருந்தோம்.

அந்த உறுதிமொழியை 'காலைக்கதிர்' செவ்வனே நிறைவேற்றியுள்ளதா என்பதை வாசகர்களாகிய நீங்கள் மதிப்பிட்டு தீர்மானிக்கும் வேளை இதுதான்.

கட்டணம் ஏதுமின்றியே, நமது தாயகத்திலும் தாயகத்திற்கு வெளியில் இலங்கையின் பிற இடங்களிலும், புலம்பெயர் தேசங்களிலும் உள்ள நமது உறவுகளை நாள் தவறாமல் விடியும் வேளை சந்திக்கும் வாய்ப்பைத் தந்து நிற்கும் ஆத்ம சக்திக்குத் தலைவணங்குகின்றோம்.

செய்தித் தேடலில் உங்களைத் திருப்திப்படுத்தி உங்கள் தேவையை நிறைவு செய்யும் எங்கள் பணி என்றும் தொடரும் என்று கூறி, அதற்கு உங்கள் வாழ்த்தையும், ஆசியையும், ஒத்துழைப்பையும் அன்புரிமையோடு எதிர்பார்த்து அமைகின்றோம்.

நன்றி
**ஆசிரியர்**

## வெள்ளவாய விபத்தில் 30 பேர் வரை படுகாயம்



கொழும்பு, நவ. 06

வெள்ளவாய – தனமல்வில பிரதான வீதியின் குடாஓய, அலிவங்குவ என்ற பிரதேசத்தில் தனி பக்கம் 03 »

## எந்தவொரு தரப்புடனும் எனக்கு இரகசிய உடன்பாடு கிடையாது!

### அடித்துக் கூறுகின்றார் சஜித்

கொழும்பு, நவ. 12

எந்தவொரு தரப்புடனும் இரகசிய உடன்பாடுகளைத் தான் செய்துகொள்ளவில்லை எனப்புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹியங்கனையில் இடம்பெற்ற பிரசாரக் பக்கம் 03 »



## 2015 இன் பின்னபே தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

### பிரதமர் ரணில் கிழக்கில் தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 06

தமிழ் மக்களின் பாதுகாப்பு 2015 ஆம் ஆண்டின் பின்னரே உறுதிப்படுத்தப்பட்டது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பக்கம் 03 »

## யாழ். மூத்த ஊடகவியலாளர் பெருமாள் ஐயா காலமானார்

யாழ்ப்பாணத்தின் மூத்த ஊடகவியலாளர் பெருமாள் ஐயா(வயது 86) நேற்றுக் காலமானார்.

'ஈழநாடு' பத்திரிகையின் செய்தி பக்கம் 03 »



## சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க புளொட் முடிவு



கொழும்பு, நவ. 06

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க புளொட் தீர்மானித்துள்ள பக்கம் 02 »

## இரண்டு வருடங்களாக தேடப்பட்ட ஆவா வினோதன் நீதிமன்றில் சரண்

யாழ்ப்பாணம், நவ. 06

யாழ்ப்பாணத்தில் பல வாள்வெட்டு வன்முறைகள், கொள்ளை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் கடந்த 2 வருடங்களாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பக்கம் 03 »

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணையிலும் அரசியல் இலாபம் தேடுகின்றது எதிர்க்கட்சி

### திகணவில் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, நவ. 6

ஏப்ரல் குண்டுத் தாக்குதல் பற்றி விசாரணை நடாத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அங்கத்துவத்தை புறக்கணித்துவிட்டு, இப்போது புதியதொரு குழுவை பக்கம் 03 »



## சஜித்தின் மனைவி நேற்று யாழ்ப்பாணத்தில் பிரசாரம்



யாழ்ப்பாணம், நவ.06

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பக்கம் 03 »

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று காலை 8.30 மணி முதல் பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் என்.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

தேசிய நீர்வழங்கல், வடிகால் அமைப்பு சபையின் யாழ் பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் ஏகாம்பரநாதன் ஜெகதீசன் பிரதம விருந்தினராகப் பங்குபற்றுகின்றார். வைத்தியர் நளாயினி ஜெகதீசன் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை வழங்குவார்.

## இன்று யாழில் இரான் உரை

யாழ்ப்பாணம், நவ.06

நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரத்ன இன்று காலை 10 மணி முதல் யாழ் ரில்கோ ஹோட்டலில் நடைபெறும் நிகழ்வில் வடக்கு மக்களைச் சந்திக்கின்றார்.

‘புதிய இலங்கையை நோக்கிய ஒரு முன்நகர்வு’ என்ற தலைப்பிலான கலந்துரையாடலில் அவர் உரையாற்றவிருக்கின்றார்.

### சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சி தனித்து தீர்மானத்தை அறிவிக்காது கூட்டமைப்பாக இணைந்து தீர்மானத்தை அறிவித்திருந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாம் ஏற்கனவே ஒரு தீர்மானத்தை எடுத்து அதில் உறுதியாக உள்ளோம். இது ஒரு மாதத்துக்கும் முன்னரே எடுக்கப்பட்ட தீர்மானம். அதாவது நாம் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பது, அதில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதே சரியான தெரிவு என்பதை நாம் கூறிவிட்டோம். இப்போதும் நாம் அந்தத் தீர்மானத்தில் உறுதியாக உள்ளோம்.

எமது நோக்கம் என்னவெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளருடன் நிற்க வேண்டும் என்பதே. அதில் எமது தலைமைகள் தனித்தனி தீர்மானம் எடுக்க வேண்டியதில்லை. கூட்டமைப்பாக ஒரு தீர்மானத்தை வெளிப்படுத்தியிருந்தால் இன்னமும் ஆரோக்கியமானதாக இருந்திருக்கும். எவ்வாறு இருப்பினும் இப்போதும் நாம் ஒற்றுமையாகத் தமிழ் மக்களின் நலன்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு.

ஆதரவு விடயத்தில் பிரதமர் என்னை அழைத்துப் பேசினார். எமது ஆதரவு குறித்து வினவினார். நாம் ஏற்கனவே எடுத்த தீர்மானம் குறித்து அவருக்குக் கூறினேன். செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் நிலைப்பாடு குறித்து அவருடன் பேசுவார் எனக் கூறினார். எவ்வாறு இருப்பினும் எமது முழுமையான ஆதரவை சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக வழங்க வேண்டும், அவ்வாறு உங்களின் ஆதரவு எமக்கு கிடைக்கும் என தான் நம்புகிறார் என என்னிடம் கூறினார் – என்றார். (ஐ)

# மொட்டைத் தோற்கடிப்போம்! குமார வெல்கம நேற்று சூளுரை



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுவைத் தோற்கடிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் வேட்பாளர் ஒருவர் போட்டியிடாதமையால் வாக்களிக்கும் போது சரியான தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு அவர் ஸ்ரீ.ல.சு.கட்சியினரிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஸ்ரீ.ல.சு.கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம இவ்வாறு கூறினார்.

ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடாத நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபயவுக்கு ஆதரவை வழங்குகின்றனர். இது தொடர்பில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் குமார வெல்கம உள்ளிட்ட ஸ்ரீ.ல.சு.கட்சியின் அதிகமானோர் நாம் ஸ்ரீலங்கா என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கியது இவ்வாறான பின்னணியிலாகும்.

நேற்று இடம்பெற்ற அந்த அமைப்பின் மாநாட்டில் உரையாற்றிய குமார வெல்கம, ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுவைத் தோற்கடிக்க வேண்டும் எனத் தெரிவித்த போதிலும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தெரிவிக்கவில்லை.

எமது கட்சியைப் பாதுகாக்க வேண்டுமாயின் நல்ல புத்திசாதுர்யமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்

மொட்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் ராஜபக்ஷ ஒருவர் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைவராக வந்துவிடுவார் என்றும் குமார வெல்கம கூறினார்.

# அமைப்பாளர்கள் நீக்கம்! சுதந்திரக் கட்சி அதிரடி!!

கொழும்பு, நவ. 06

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர்கள் பலர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று இடம்பெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

எனினும், இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட ஆலோசகரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்ட அமைப்பாளர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று, சந்திரிகா தலைமையில் ‘நாங்கள் இலங்கை’ என்ற அமைப்பினால் விசேட மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு, சுகததாஸ உள்ளக அரங்கில் மாநாடு இடம்பெற்றது.

இதில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே, இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமைப்பாளர்கள் பலர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

### ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. இன்று எமது கட்சியின் உறுப்பினர்கள் கூடி எமது நிலைப் பாடுகள் குறித்து ஆராயவுள்ளோம் என்று ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானம் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். அதேபோல் வெறுமனே ஒரு வேட்பாளரை வீழ்த்த இன்னொரு வேட்பாளருக்கு அர்த்தமற்ற ஆதரவை வழங்கவும் முடியாது. நாம் ஒரு ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்றால் எமது மக்கள் சார் விடயங்களில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாது ஒரு வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய எமது மக்களை ஏமாற்ற முடியாது.

சில தீர்மானங்களில் நாம் உறுதியாக உள்ளோம். எமது நிலைப்பாடுகள் குறித்து நாம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் பேசுவோம். எம்முடன் பேசவும் அவர் தயாராக உள்ளார். புதனன்று நாம் எமது தீர்மானத்தை அறிவிப்போம் – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாகத் தொலைக்காட்சிப் பேட்டி என்று கேட்டால் – முதலில் கேள்வியை எழுத்தில் தாருங்கள், நான் பதிலை எழுதிக் கொண்டு வருகிறேன் என்பார்.

‘என்னடா, இவர் அரசியல் வாதி....;’ –என்று நானே என்னை நொந்து கொள்வதுண்டு.

ஆனால், அவரின் அந்தப் போக்கும் சரியானதுதான் என்று நிரூபிக்கும் வகையில் எனது சகோதர ஊடகவியலாளர்கள் நடந்து கொள்வதுதான் வேதனையிலும் வேதனை.

நேற்று நீதியரசர் விக்னேஸ்வரனைப் பற்றி ஒரு செய்தி சில ஊடகங்களில் வெளியானது.

*“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவை பணத்தை வழங்கியே அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.*

*“வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வீ.விக்னேஸ்வரனே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.”*

–இந்தச் சாரப்பட அந்தச் செய்தி அமைந்திருந்தது.

பணத்துக்கு தமிழரசு விலை போனது – ஊழலுக்கு இடமளித்தது – என்ற மனப்பதிவை அந்தச் செய்தி எனக்குத் தந்தது. விக்னேஸ்வரன் அப்படிக் கூறினாரா என்று தேடிப்பார்த்தேன்.

விக்னேஸ்வரன் புத்திசாலி. தமது வீட்டின் – அலுவலக அறையில் – தம்மைச் சந்திக்கும்நபர்களுடனான உரையாடல் களை அப்படியே பதிவு செய்யும் விதத்திலான வசதியை வைத்திருப்பார் போலும். மேற்படி செய்தியாளருக்கு அவர் வழங்கிய பேட்டியில் அவர் கூறிய கருத்துக்களின் பதிவைக் கேட்டேன். அதனை வாசகர்களிடம் பகிர்ந்து கொள்கின்றேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவு குறித்து விக்னேஸ்வரனிடம் கேட்கப்பட்டது.

*“தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையிலே அவர்களுக்கு சில கடப்பாடுகள் இருக்கின்றன. கடந்த ஒரு வருடத்தை எடுத்துப் பார்த்தீர் களோயானால் தற்போதைய அரசாங்கம் வெகுவாகப் பணத்தைக் கொடுத்து மக்களுக்கு சேவை செய்யுங்கள் என்ற முறையிலே நாடாளுமன்ற அங்கத்தவர் களுக்குப் பெருவாரியான பணம் கொடுத்திருக்கின்றார்கள். சில, சில வீதிகளைத் திருத்துகின்றார்கள். ஏதேதோ வேலைகளை எல்லாம் செய்கின்றார்கள்.*

*ஆகவே, ஒரு விதத்திலே அவர்கள் பணத்தைக் கொடுத்து தங்கள் பக்கத்துக்கு இவர்களை இழுத்து விட்டார்கள் போன்று எங்களுக்குத் தெரிகின்றது.”*

– இதுதான் விக்னேஸ்வரன் கூறிய வார்த்தைகள்.

அதாவது, மக்கள் நலத்திட்டங்களை முன்னெடுங்கள் என்று கூறி, இந்த எம்.பிக்கள் ஊடான செயற்றிட்டங்களுக்கு இந்த அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றது. அதன்மூலம் சில வீதிகள் அமைப்பு என்று ஏதோ திட்டங்கள் செய்கின்றார்கள் என்பதுதான் விக்னேஸ்வரனின் கருத்து. இந்த நிதி ஒதுக்கீடுகளைக் கொடுத்து கூட்டமைப்பினரைத் தங்கள் பக்கத்துக்கு அரசாங்கம் இழுத்து விட்டது போன்றே தங்களுக்குத் தெரிவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பணத்தை வழங்கியே அரசு பெற்றுக் கொண்டது என விக்னேஸ்வரன் கூறினார் என மொட்டையாக சுட்டினால் அது எத்தகைய அர்த்தத்தைத் தரும்?

தமது செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள் கொஞ்சம் பொறுப்பாக நடந்து கொண்டால் தான் எமது ஊடகத்துறையின் மதிப்புப் பேணப்படும் என்பது எனது அனுபவப் பாடம். அடுத்த தலைமுறை –இளம்– ஊடக வியலாளர்கள் கவனிக்க வேண்டிய விடயம் இது.

★ ★ ★

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் சந்திரிகா அணியும் புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித்தை ஆதரிக்கவும், சஜித்துக்காய்ப் பிரசாரம் செய்யவும் களம் இறங்கியுள்ள போதும் ஒரு விடயத்தில் இந்த இரண்டு தரப்புகளும் தெளிவாக உள்ளன.

அது, சஜித்தின் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது புதிய ஜனநாயக முன்னணியின் மேடையில் ஏற்றுவதில்லை என்பதுதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், சந்திரிகா அணியினரும் தங்களுக்குத் தங்களுக்கெனத் தனி மேடைகள், கூட்டங்கள், பிரசார நடவடிக்கைகள் என்று ஈடுபடத் தீர்மானித்திருக்கின்றனர்.

சுதந்திரக் கட்சியின் அடி மட்டத் தொண்டர்கள், அமைப்பாளர்கள் பெரும் எண்ணிக்கையில் சுதந்திரக் கட்சியைக் காப்பாற்றும் சந்திரிகாவின் நேற்றைய கூட்டத்துக்குத் திரண்டு வந்தமை சஜித் தரப்புக்கு பெரும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தந்திருப்பதாகக் கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதற்கிடையில் –

சந்திரிகாவை சு.கவிலிருந்து உத்தியோக பூர்வமாக இடைநிறுத்தும் அல்லது வெளியேற்றும் வகையில் சு.கவுக்குள் நடவடிக்கை எடுக்கும் அக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எத்தனம் கீழ் மட்ட சு.கவினர் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே கட்சியை உடைத்து மஹிந்த அணியைத் தனியாக்கி, கட்சியை குட்டிச் சுவராக்கிவிட்டார், மிச்சசொச்சம் இருக்கும் சந்திரிக்காவையும் அவர் ஆதரவாளர்களையும் வெளியேற்றி கட்சியை முழுவதும் அழித்து விட்டுத்தான் விடுவேன் என்று கங்கணம் கட்டியிருக்கின்றாரோ இந்த மனிதர் என்று அவர்கள் மனம் புழுங்கிப் பேசிக்கொண்டமையை நேற்று சந்திரிகாவின் கூட்டத்துக்குச் சென்றிருந்த செய்தியாளர் ஒருவர் அவதானித்துள்ளார்.

இதேசமயம் – தெற்கின் முக்கிய மாகாணம் ஒன்றின் ஆளுநர், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக அரசியல் மேடைகளில் பேசி வருகின்றமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிரடி உத்தரவு ஏதும் அடுத்து வரும் நாள்களில் வெளிவரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளுநர்கள் அரசியல் பிரசார மேடைகளில் தோன்றுதல், பேசுதல் போன்றவை தடை செய்யப்பட்டிருக்கின்றன என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறுகின்றன. பார்ப்போம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள் என்பதை.

- மின்னல் -

## தெற்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாடு நேற்று சுகததாஸ உள்ளக அரங்கில் இடம் பெற்றது.

மாநாட்டில் 70 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் அதிர்ச்சி அடைந்துள்ளன.

சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் மீது அதிருப்தி அடைந்த உறுப்பினர்களே நேற்றைய மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவுடன இணைவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் எடுத்த தீர்மானத்துக்கு எதிராக இந்த மாநாடு நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் குமார் வெல்கம, எந்த ஒரு காரணத்துக்காகவும் தான் தாமரை மொட்டுக்கு வாக்களிக்க மாட்டேன் எனக் குறிப்பிட்டார்.

சந்திரிகா தலைமையிலான குழுவினர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்நிலையில் நேற்றைய மாநாட்டில் பெருமளவுஉறுப்பினர்கள்கலந்து கொண்டமை மஹிந்த அணிக்குப் பெரும் பின்னடைவு என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கு உரையாற்றிய சந்திரிகா –

எங்கள் கட்சி எரிந்துவிட்டது. கட்சியின் போசகராக இருந்தாலும், நான் கட்சிப் பணிகள் எதிலும் ஈடுபடவில்லை.

கட்சியின் 95வீதமானவர்கள், சு.க சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்பாளர் நிறுத்தப்படவேண்டும் என்று கூறியுள்ளனர். எனினும், கட்சியின் பெரும்பான்மை கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

கட்சி, நாட்டைப் பாதுகாக்க வேண்டும். வேட்பாளர்களை பார்க்காமல், கொள்கைகளை பற்றிசிந்திக்கவேண்டும். 2015இல் நான் அப்படித்தான் முடிவெடுத்தேன். அது நாட்டை அடிப்படையாகக் கொண்ட தீர்மானம்.

தேசிய ஜனநாயக முன்னணி, பெரமுன வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளைப் பார்த்தேன். கோட்டாபயவின் கதைகள் அழகாக இருக்கின்றன.

மக்களுக்குச்சுதந்திரம்கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்கள். நான் சிரித்தேன்.

எனது அரசின் கீழ் அரசு ஊழியர்களின் சம்பளத்தை ஐந்து மடங்கு அதிகரித்துள்ளேன். நான் மூன்று வருடங்களில் யுத்தத்தை கணிசமாக முடித்தேன். நான் கொண்டுவந்த ஆயுதங்கள் மூலமாக போர் மேற்கொள்ளப்பட்டது.

ஊழலை ஒழிப்பதாக அவர்கள் கூறுவது நூற்றாண்டின் மிகப்பெரிய நகைச்சுவை. ராஜபக்ஷ அரசு உலகின் மிக விலையுயர்ந்த சாலைகளைக் கட்டியது. வேறு என்ன செய்தீர்கள்? நீர்ப்பாசனம்மேம்படுத்தப்பட்டதா? அல்லது கல்வி மேம்படுத்தப்பட்டதா?

ராஜபக்ஷ காலத்தில் சிறு குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்தது.

மக்கள் சுதந்திரத்தை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்று கோட்டாபயராஜபக்ஷவிடம்கேட்க விரும்புகிறேன்.

நீங்கள் பத்திரிகையாளர்களைக் கொல்கிறீர்களா, இல்லையா?

மற்ற வேட்பாளரின் (சஜித்) திட்டம் மிகவும் வெற்றிகரமாக உள்ளது. இந்த ஆட்சியின்போது சுகாதாரத் துறை பெரிதும் மேம்படுத்தப்பட்டது. கல்வியில்நிறைய வேலை செய்தேன்.

இது பொருளாதாரத்தை பெரிதும் பலப்படுத்தியது. மேலும் செய்ய இயலாது. அப்போதும் சம்பளம் அதிகரித்தது.

அத்தனகல்லவிலும்அபிவிருத்திப் பணிகள் செய்தோம். அரசு என்ன செய்தது என்பது மக்களுக்குத் தெரியாது. இந்த அரசில் ஊடக நிறுவனங்களிலிருந்து வரும் தலைவர்கள் இருக்கிறார்கள், ஆனால் அதை எப்படி வெளியில் சொல்வதென அவர்களுக்கு தெரியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியை அழிக்க மூன்று முறை முயன்றார். நாங்கள் அவர்களைத் தடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

## வெள்ளவாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யார் பஸ் ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் 30 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களுள் இரண்டு பிக்குகளும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் தனமல்வில ஆதார வைத்தியசாலையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கவலைக்கிடமாக உள்ள ஏழு பேர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். (ஐ)

## யாழ். மூத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியராகவும் பின்னாளில் உதயன் பத்திகையிலும் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றியிருந்தார். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேல் அச்சு ஊடகத்துறை அனுபவம் மிக்கவராக விளங்கிவந்த அவர் நேற்றுத் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

தன்னுடையஉடலத்தையாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில்மருத்துவக்கற்கைநெறிக்காகக்கையளிக்கப்படவேண்டும் என் பது அவருடைய வேண்டுகோளாக இருந்தது. அதன்படி அவரது பூதவுடல் நேற்றுமாலைகையளிக்கப்பட்டது.

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று எதிரணியினர் எமது செயற்பாடுகள் தொடர்பாகப் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதாவது, நான் ஏதோ உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டேன் என்று கூறப்படுகிறது. என்ன உடன்படிக்கை என்று நான் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

இங்கு ஒரு விடயத்தை நான் கூறுகிறேன். என்னை வேட்பாளராக தெரிவு செய்தபோதும், சிலர் உடன்படிக்கைகளுடன் என்னைச் சந்தித்தார்கள். நான் எதற்கும் அடிபணியவில்லை. நான் எந்த தரப்புக்கும் அடிபணியப் போவதில்லை. நான் முதுகெலும்புள்ள ஒருவன்.

இந்த நாட்டையோ, எமது சுயாதீனத்தையோ விற்கப்போவதில்லை. நான் மக்களிடம் கோருவது, எனக்கான ஆணையை மட்டும்தான்.

நீங்கள் இதைச் செய்யுங்கள்! நான் இதைச் செய்கிறேன் என நான் என்றும் கூறமாட்டேன். இந்த கீழ்த்தரமான அரசியல் கலாசாரத்துக்கு நான் என்றும் அடிபணிய மாட்டேன்.

எனவே, என்மீதானஎந்தவொரு விமர்சனத்துக்கும் நான் கவலையடையப் போவதில்லை. எனது தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே நாம் அனைத்து விடயங்களையும் கூறிவிட்டோம் – என்றார். (ஐ)

## ஈஸ்டர் ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கின்றனர். எங்களது அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான ஏதேனும் விடயங்கள் இருக்கின்றனவா என்று முதலில் பாருங்கள். எல்லாவற்றிலும் அரசியல் இலாபம் நாடுவது எதிர்க்கட்சிக்குப் பழக்கப்பட்டுவிட்டது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நேற்று திகணவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

திகண என்று கூறும்போது எமக்கு நினைவுக்கு வருவது அண்மையில் இடம்பெற்ற கலவரம்தான். இந்த துரதிஷ்டமான சம்பவம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு பாரிய அடியாக விழுந்தது. முழுநாட்டுக்கும் களங்கம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தில் சிங்கள இளைஞர்கள் சிலர் கோபப்பட்டு குழப்பமடைந்தனர். இதற்காக சமூக ஊடகங்களையும் அவர்கள் பயன்படுத்தினர். அரசு உடனடியாகச் செயற்பட்டு சமூக ஊடகங்களைத் தடைசெய்து, நிலைமையைக் கட்டுப்படுத்தியது.

இங்குள்ள பிரதேச சபை உறுப்பினர் உட்பட பலர் சிறைச்சாலைக்குச் செல்ல நேரிட்டது. நாம் யார் மீதும் குற்றம் சுமத்தப் போவதில்லை. அது நீதிமன்றத்தினால் செய்யப்பட வேண்டியது. ஆனால், நீதியைச் சீர்குலைப்பதை அங்கீகரிக்காத அரசு என்ற வகையில், குற்றவாளிகளை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம்.

திகண சம்பவத்தின் பின்னர், நாட்டில் பல்வேறு பகுதிகளில் ஏற்படவிருந்த குழப்பங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக சுமார் 152 பேரை கைதுசெய்ய நேரிட்டது. ஆனால், அரசின் மூலம் யாரும் எந்த விளைவுகளையும் ஏற்படுத்தவில்லை. நாம் நீதித்திணைக்களத்தின் மூலம் அவற்றை முறையாகச் செய்தோம்.

இவ்வாறான சம்பவங்கள் அவ்வப்போது ஏற்படுவதற்கு வழிவகுக்கும் காரணிகளைப் பார்க்கும்போது பொதுமக்களைக் கோபப்படுத்தும், அப்பாவிப் பொதுமக்களின் சொத்துக்களுக்கு அநியாயம் செய்யும், மக்களின் வாழ்க்கையை அழிக்கும் அநியாயக்காரர்களுக்கு தண்டனை வழங்கும் நடவடிக்கைகள் முன்னைய அரசாங்கத்தில் இருந்ததா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஏப்ரல் குண்டுத் தாக்குதல் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பார்த்ததும் மற்றும் கேட்டதுமான சாட்சியங்களைப் பதிவுசெய்து பரிந்துரைகளைச் சரியாக பெற்றுக் கொடுத்தோம். புலனாய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்கள் தேவையான நேரத்தில் முன்வைக்கப்படவில்லைஎனில், அதன் கைசேதங்களுக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும் என்பதைத் தெளிவாகப் பரிந்துரை செய்துள்ளோம்.

அரச தலைவர்களும் தங்கள் கடமைகளிலிருந்து ஓரளவுக்கு தவறியிருந்தாலும் அதுபற்றியும் தெரிவுக்குழு அறிக்கையில் குறிப்பிட்டோம். பொறுப்புடன் நடந்துகொள்ளும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நாட்டின் பாதுகாப்புக்காக அனைவரும் ஒன்றிணைவதுவழக்கம். ஆனால், எதிர்க்கட்சிலுள்ளமொட்டுஅணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தெரிவுக்குழு அங்கத்துவத்தைப் பகிஷ்கரிப்புச் செய்தன.

நாட்டின் பாதுகாப்புக்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில், கட்சிபேதம் பாராமல் அனைவரும் ஒன்றிணைவது தேசிய மட்டத்தில் சாதாரணமாக நடக்கின்ற நிகழ்வாகும். ஆனால், எமது நாட்டில் அவ்வாறு நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் அரசியல் செய்கின்றனர். எதிரிகள் மீது எப்படி குற்றம் சுமத்தலாம் என்று மாத்திரமே பார்க்கின்றனர். அரசாங்கத்தின் மீது எல்லாவற்றையும் சுமத்திவிட்டு தப்பிக்கவே பார்க்கின்றனர்.

நாம் உண்மையைக் கண்டறிவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தபோது சுதந்திரமாக எமக்கு வேண்டிய எந்த கேள்வியையும் கேட்கமுடியும். அதற்குத்தான் தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் எல்லாக் கட்சிகளுக்கும் தெரிவுக்குழுவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சியினர் அதனை நிராகரித்து குறுகிய அரசியல் இலாபம் பெற்றுக்கொண்டனர்.

இப்போது புதிதாக இன்னொரு குழுவை நியமிக்கின்றனர். எங்களது நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை என்னவென்று முதலில் பாருங்கள். நாம் முன்வைத்த சாட்சியங்களுக்குப் புறம்பாக, ஏதேனும் சொல்லப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சி என்றாலும் சரி, எதிர்க்கட்சி என்றாலும் சரி, முதலில் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும். எல்லாவற்றிலும் கீழ்த்தரமான அரசியல் இலாபத்தை நாடுவது எதிர்க்கட்சிக்கு பழக்கப்பட்டுவிட்டது – என்றார். (ஐ)

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவா என பொலிஸாரால் விளிக்கப்படும் இளைஞர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று சரணடைந்தார்.

சந்தேகநபரை வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆவா குழுவின் முக்கியஸ்தர் எனவும் ஆவா எனவும் பொலிஸாரால் குறிப்பிடப்படும் இணுவிலைச் சேர்ந்த குமரேசரத்தினம் வினோதன் என்ற இளைஞனே இவ்வாறு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தனது சட்டத்தரணி ஊடாகச் சரணடைந்தார்.

அச்சுவேலிப் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட வன்முறைச் சம்பவம் ஒன்றின் வழக்கில் சந்தேகநபராக அவர் நேற்று சரணடைந்தார். (ஐ-07)

## சஜித்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி வடக்குக்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்துக்குச் சென்ற அவர் மன்னார் ஆயரைச் சந்தித்துக் கலந்தரையாடியமையுடன் அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார். இதன்போது யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் கொழும்பு மாநகரமுதல்வர்ரோசிசேனாநாயக்க உள்ளிட்ட கட்சிப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (ஐ-7)

## 2015 இன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித்பிரேமதாஸவின்வெற்றியை உறுதிப்படுத்தும், தேர்தல் பிரசாரக் கூட்டம் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தாங்கள் வெற்றி பெற்றால் பிள்ளையானை முதலமைச்சராக்குவோம் என்று கோட்டபாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் சொல்கின்றார்கள். நாங்கள் எல்லாப் பதவிகளையும் முஸ்லிம்களுக்கு வழங்கப் போகின்றோம் என்றும் அதனால் கிழக்கு முதலமைச்சர் பதவியை பிள்ளையானுக்கு வழங்கப் போகின்றோம் என்றும் அவர்கள் சொல்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு முதலமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உரிமை இருக்கின்றது. அதே உரிமை முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இருக்கின்றது.

இறுதியாக தமிழ், முஸ்லிம், சிங்களம் என்பதைவிட வேலை செய்யக்கூடிய முதலமைச்சர் தான் தேவை. தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டுமாக இருந்தால் அதனை தமிழர்கள் தான் முடிவுசெய்யவேண்டுமே தவிர கோட்டாபாய தெரிவு செய்ய முடியாது.

ராஜபக்ஷவினர் இப்போது தமிழ் மக்களின் உரிமை பற்றிப் பேசுவதற்கு மிகவும் விருப்பப்படுகின்றார்கள். அப்படியானால் தமிழில் தேசிய கீதத்தைப் பாடுவதற்கு நாங்கள் வழிவகை செய்தபோது ஏன் அதனை எதிர்த்தீர்கள்?

எதிர்வரும் 16ஆம் திகதி அன்னப்பறவைச் சின்னத்துக்கு சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினால் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். அத்துடன் சுதந்திரத்தைப் பாதுகாத்து இந்தப்பகுதியை அபிவிருத்தி செய்யவேண்டும்.

வரும் காலத்தில் விவசாயத்தை நவீனமயப்படுத்தவுள்ளோம். நெல்லுற்பத்தியை அதிகரிக்க உதவிசெய்வோம். மீன்பிடித் துறையை நாங்கள் நவீனமயப்படுத்துவோம். புதிய படகுகளை வழங்குவோம். மீன்பிடி மற்றும் விவசாயத்தையும் அபிவிருத்தி செய்ய தனியார் துறைகளின் ஆதரவுடன் குளிர்சாதனக் களஞ்சிய வசதிகளை உருவாக்குவோம். கப்பல் துறையிலே மட்டக்களப்புக்கும் அம்பாறைக்கும் இடையில் ஒரு வர்த்தக நிலையத்தை உருவாக்கவுள்ளோம்.

புதிய பொருளாதாரத்தை இப்பகுதிக்கு வழங்குவோம். மட்டக்களப்பிலே தற்போது விமான நிலையம் செயற்படுகின்றது. இந்தியாவின்சென்னையிலிருந்து மட்டக்களப்புக்கு விமானங்கள் வரும். மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு விமானங்கள் செல்லக்கூடியதாக இருக்கும். 2 விமான நிறுவனங்கள் சேவையில் ஈடுபடவுள்ளன. சுற்றுலாத்துறையினர் இங்கு வருகை தருவார்கள். அதிகமான தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். இதனூடாக சகல துறையினருக்கும் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இவ்வாறு பல பாரிய அபிவிருத்தித் திட்டத்தை கொண்டுவருவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## தமிழ் வாக்காளரின் நிலைப்பாடு

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் பத்து நாள்களே உள்ளன.

இந்தத் தேர்தலை எப்படித் தமிழர்கள் எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதே கேள்வி.

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கின்ற கட்சிகள் அனைத்தும் ஒருமித்த நிலைப்பாட்டை எடுத்து, தமிழர்களை ஒருவழிப்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்புப் பெரும்பாலும் தோற்றுப் போய்விட்டது.

ஆனாலும், தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி நிற்கும் கட்சிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர ஏனைய கட்சிகள் துருவ நிலைப்பட்ட – எதிர் எதிர்ப் போக்கு டைய – முடிவை எடுக்காமல் இருக்கின்றமை பின்னடை விலும் ஒரு முன்நகர்வு என்று கருதலாம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உட்பட்ட ஆறு கட்சிக ளும் தமிழர்களின் எதிர்பார்ப்பை – அபிலாஷையை – வேணவாக்களை – விருப்புகளை – ஒன்றுபட்டு வெளிப்படுத்துவதில் ஒருமைப்பட்டன என்பது ஆறுதலளிக்கும் முதல் விடயம்.

எனினும், அதனை வலியுறுத்தி, அதற்காக விடாது குரல் எழுப்புவதில் அவை ஐக்கியப்படத் தவறின.

வலியுறுத்தப்பட்ட விடயங்களில் வேறும் சில அம்சங்க ளைச் சேர்க்க மறுத்தமையால் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி முதலில் தனி வழிப்பயணம் புறப்பட்டது. தேர்தல் பகிஷ் கரிப்பு என்ற தனது முன்னைய நிலைப்பாட்டை அது இறுகப் பற்றிக் கொண்டது.

ஏனைய ஐந்து கட்சிகளும் தமிழரின் கோரிக்கையை ஒன்றுபட்டு முன்வைத்த போதிலும், இந்த ஜனாதிபதித் தேர் தலை ஒட்டி தமிழ் மக்கள் என்ன முடிவு எடுப்பது, எப்படிச் செயற்படுவது என்பது தொடர்பில் அவர்களை வழிப்படுத்தும் விடயத்தில் ஐக்கியப்படுவதினின்றும் விலகின. சிதறுண்டு போயின.

முதலில் தமிழ் மக்கள் கூட்டணி தன்பாட்டில் முந்திக் கொண்டு ஓர் அறிவிப்பை வெளியிட்டுத் தனி வழி புறப்பட்டது.

தமக்குள் மூன்று கட்சிக் கூட்டணியாக இருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பின்னர் தன்பாட்டில் ஒரு முடிவை அறிவித்து, தனிவழித் தீர்மானத்தில் தானும் சளைத்தது அல்ல என்பதைப் பகிரங்கப்படுத்தியது. அதனுடன் கூட்டமைப்பில் ஒன்றிணைந்துள்ள புளொட்டும், ரெலோவும் இனிமேல் இலங்கைத் தமிழரசுக் கட்சி எடுத்த நிலைப்பாட்டுடன் சேர்ந்து இழுபடும் என நம்பப்படுகின்றது. அது நடக்குமா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஒன்றுபட்டுச் செயற்பட முன்வந்த ஐந்து கட்சிகளில் நான்கு, தனித்தனிப் பாதையை வகுத்துக் கொண்டு விட்ட நிலையில் கடைசியாகத் தனித்து விடப்பட்ட ஈ.பி.ஆர்.எல். எவ்., கூட்டு முயற்சி பலனளிக்காதமையால் இறுதியில் தனித் துத் தனது நிலைப்பாட்டை – முடிவை – அறிவிக்க வேண்டி யதாயிற்று. இப்போது அறிவித்துள்ளது.

இப்படி ஐந்து கட்சிகளும் மூன்று வித நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் வழிகாட்டல் துருவ நிலைப்பட்டதாக – ஒன்றுக்கொன்று முழுதும் எதிரானதாக – இல்லை என்பது அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று.

எந்தச் சிங்களக் கட்சிக்கும் – வேட்பாளருக்கும் – வாக்க ளிக்கும்படி எங்கள் தமிழ் மக்களை நாம் வழிப்படுத்த முடி யாது என்பது நீதியரசர் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியின் தீர்மானம்.

அதையே ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமச்சந் திரனும் சுட்டிக் காட்டுகின்றார்.

ஆனால், விக்னேஸ்வரன் தமிழ் மக்களை தங்கள் தெரி வுக்கு ஏற்ப வாக்களிக்கும்படி தூண்டுகின்றார். எனினும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அந்த விடயத்தில் – தமிழ் மக்களைத் தவறாது வாக்களிக்கக் கோரும் விவகாரத்தில் – மௌன மான போக்கையே கடைப்பிடிக்கின்றார். அதுபற்றி அவர் தமது அறிக்கையில் பேசத் தவறியமையால் தமிழ் மக்களை வாக்களிக்கச் செல்ல வேண்டாம் என்று – அல்லது பகிஷ் கரிக்கும்படி – அவர் கோருகின்றார் என்றும் அர்த்தம் அல்ல.

அதேசமயம், இந்தத் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை நிராகரித்து புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கும்படி கூட்டமைப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி பகிரங்கமாகக் கோரு கின்றது. அந்த வழிக்கு கூட்டமைப்பின் மற்றைய இரு கட்சிக ளான ரெலோவும் புளொட்டும் வரும் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.

வடக்கு, கிழக்கு வாக்காளர்கள் – தமிழ் வாக்காளர்கள் – அரசியலில் தேர்ந்தவர்கள். விடயம் அறிந்தவர்கள். விவ காரம் புரிந்தவர்கள்.

மேற்படி ஐந்து தமிழ் கட்சிகளின் முத்தரப்பு நிலைப்பாட் டுக்கு நடுவில் ஒரு பொது இழை ஓடுவதை அவர்கள் அறி வார்கள். அதைப் பற்றி நின்று, தமது முடிவை அவர்கள் எடுப்பார்கள். யாரும் அது குறித்து சந்தேகப்படத் தேவை யில்லை.

# பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, நவ. 06

புத்தளம் – ஆனமடுவ நகரில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஆதர வாளர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இந்தப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரசா ரக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு கருவ லகஸ்வெவ பகுதியை நோக்கி பஸ்ஸில் பய ணித்தவர்கள் மீதே இனந்தெரியாத சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த 4 பேர் தப்போவ மற்றும் புத்தளம் தள வைத்தியசாலை களில் சிகிச்சைப் பெற்று வருகின்றனரெனக் கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்கள் உட்பட 20 இற்கும் மேற் பட்டவர் களைக் கொண்ட குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலால் பஸ்ஸுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, தாக்குதலை மேற்கொண் டவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி கருவலகஸ்வெவ பொலிஸ் நிலையத் தில் 100க்கும் அதிகமானவர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு வெளியிட்டனர். இதனால், அங்கு சில மணி நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து, அந்த இடத்திற்கு வந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர்களான பிரியங்கர ஜயரத்ன மற்றும் சனத் நிசாந்த உள்ளிட்டோர் தலை யிட்டு மக்களை சமாதானப்படுத்தினர். (ஐ)

# மிலேனியம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டாம்

### சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

*கொழும்பு, நவ. 06*

*மிலேனியம் சவால் உடன்பாட்டில் கைச் சாத்திட வேண்டாமென இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள் ளது.*

*இந்த விடயத்தில் ஜனாதிபதி தலை யிட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவ தைத் தடுக்கவேண்டுமென அந்தச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.*

*மிலேனியம் உடன்பாடு தற்போது ஜனா திபதித் தேர்தலிலும் பேசுப்பொருளாக மாறியுள்ளது.*

*சில கட்சிகள் இந்த உடன்பாட்டுக்கு ஆதரவு தெரிவித்து கருத்துக்களை வெளி யிடுகின்றன. அதேபோன்று ஏனைய சில கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)*

## கல்விக் கல்லூரிகளின் தேசிய டிப்ளோமா நிகழ்வு

*யாழ்ப்பாணம், நவ. 06*

*வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைத்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா வழங்கும் வைபவம் இரண்டு அமர்வுகளாக இன்று காலை 8 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.*

*முதல் அமர்வுக்கு யாழ் பல்கலைக்கழகத் தின் கணிதவியல் பேராசிரியரும், விஞ்ஞானத் தொழில்நுட்பப் பீடத் தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் ஸ்ரீசற்குணராசாவும் -*

*இரண்டாவது அமர்வுக்கு யாழ்பல்கலைக் கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஜி. மிகுந்தனும் அதிதிகளாகப் பங்குபற்றுவர். (உ)*

# ஜனாதிபதித் தேர்தலில் 13 டம்மி வேட்பாளர்கள்

### கண்டுபிடித்தது தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, நவ. 05

ஜனாதிபதித் தேர்தலில், இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், குறைந்தபட்சம் 13 போலி (டம்மி) வேட்பாளர் கள் போட்டியிடுகின்றனர் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு அடையாளம் கண்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தப் போலி வேட்பாளர்களில் ஏழு பேர் முக்கியமான ஒரு வேட்பாளருக்கு ஆதரவாக வும், ஏனைய ஆறு பேர் மற்றொரு முக்கிய வேட் பாளருக்கு ஆதரவாகவும் போட்டியில் இறங்கி யுள்ளனர்.

இவர்களுக்கு எதிராகத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள், முக்கிய வேட்பாளர்களின் மேடைகளில் காணப் பட்டனர்.

தவிர, இந்த வேட்பாளர்கள் பிரதிநிதித் துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலா ளர்கள், இரண்டு முக்கிய போட்டியாளர்களுக்கு ஆதரவான தேர்தல் பேரணிகளில் உரை யாற்றியுள்ளனர்.

இந்தமுறை ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இத னால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிச் சுமை தேவையின்றி அதிகரித்துள்ளது.

வாக்குச்சீட்டு மிகவும் நீளமானதாக உள்ளது. மேலதிகமான வாக்குப் பெட்டிகளைப் பெற வேண்டியுள்ளது – என்றார். (ஐ)




## நாளை

07.11.2019
வியாழக்கிழமை

நட்சத்திரம்: சதயம் மரண மு.ப 11.22 வரை
திதி : தசமி மு.ப 11.37 வரை
இராகுகாலம் : 12.05 – 1.35
சுப நேரம் : 4.35 – 6.05

# புனர்வாழ்வு பெற்று விடுதலையான 20 பட்டதாரிகளுக்கு அரச பணிகள்

## அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, நவ. 05
புனர்வாழ்வளிக்கப்பட்ட 20 பட்டதாரி இளைஞர்களை வேலைவாய்ப்புத் திட்டத்தில் சேர்ப்பதற்கும், அவர்களுக்கு வேலை வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த இளைஞர்கள் 20 பேரு புனர்வாழ்வு திணைக் களத்தால் புனர்வாழ்வுக்கு உட்பட்டுள்ளனர் என, புதிய திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு கோரியுள்ளனர் எனவும் அமைச்சரவைக்குப் பத்திரம் முன்வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு உயர்கல்விக்கு உட்பட்டிருந்தாலும், 20 பட்டதாரிகளும் சிவில் சமூகங்களால் தங்கள் தகுதிநிலை ஏற்றுக் கொள்ளப்படாததால் வேலை வாய்ப்பைப் பெற முடியவில்லை என்று அமைச்சரவைப் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் உள்ள மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் இந்த அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், நவ.05
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**
தொம்பை வீதி, உடுவில் மேலதிக அரசாங்க அதிபர் அலுவலக வீதி, அம்பலவாணர் வீதி ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில்-**
நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய பிரதேசம், உளுக்குளம், செட்டிக்குளம் ஒரு பகுதி, முகத்தான்குளம், முதலியார் குளம், கப்பாச்சி, துட்டுவாகை, நோயகுளம், தந்திரிமலை வீதி, சின்னசிப்பிகுளம், அழகாபுரி, NW steel industries, இலுப்பைகுளம், கஜசிங்கபுர இராணுவ முகாம், பெரிய காடு, படி யாபாம், மெனிக் பாம், ஆண்டியபுளியங்குளம், கிறிஸ்தவகுளம், சக்தி கம, ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, சேமமடு, கொள்ளியன்குளம் ஆகிய பிரதேசங்களிலும், – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்குக்கு வெளிநாட்டு உதவி பெறுவதற்கு கொடை நாடுகளின் மாநாடு

## சஜித் பிரேமதாஸ முல்லைத்தீவில் வாக்குறுதி

முல்லைத்தீவு, நவ. 06
வடக்கையும், கிழக்கையும் அபிவிருத்தி செய்வதற்கான வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக, கொடை நாடுகளின் இரண்டு மாநாடுகளை கூட்டப் போவதாக புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, முள்ளியவளையில் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரைப் பேரணியில் உரையாற்றியபோதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

தாம் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும், கூடிய விரைவில் இந்த மாநாடு கூட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக, ஜனாதிபதி அபிவிருத்திச் செயலணிகளில் இரண்டு புதிய சிறப்பு பிரிவுகள் உருவாக்கப்படும் என்றும், வடக்கு – கிழக்கு அபிவிருத்தியை தாமே தனிப்பட்ட முறையில் கவனிக்கப் போவகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீராவியடி விவகாரத்தின் பின்னணியில் கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புகள்

## புதுக்கதை விடுகின்றார் ஞானசார தேரர்



கொழும்பு, நவ. 06
முல்லைத்தீவு பழைய செம்மலை, நீராவியடி பிள்ளையார் ஆலய விவகாரத்தில் இந்து – பௌத்த சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் பின்னணியில் கிறிஸ்தவ அடிப்படைவாத அமைப்புகளே உள்ளன என்று பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

பௌத்த மதப் பாரம்பரியங்களை பலவந்தமான முறையில் இல்லாதொழிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஞானசார தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள தருணத்தில் தேர்தல் பரப்புரை மேடைகளில் மதகுருமார்கள் ஒரு தரப்பினருக்கு மாத்திரம் குறிப்பாக பௌத்த பிக்குகள் சிலர் கருத்துகளைத் தெரிவிப்பது பௌத்த மத கோட்பாடுகளுக்கு முரணானதாகக் காணப்படுகின்றன. அரசியல் தேவைகளுக்கு மாத்திரம் மதக் கருத்துகள் தற்போது பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றமை வருந்தத்தக்கது.

நாட்டில் அடிப்படைவாதம் தோற்றம் பெற்றுள்ளது என்றும் அதற்கு அரசியல்வாதிகளின் ஆதரவு காணப்படுகின்றது என்றும் பல முறை எடுத்துரைத்தும் நாங்கள் இனவாதிகளாகவும் மதவாதியாகவும் விமர்சிக்கப்பட்டோம்.

பௌத்த மதத்துக்கு எதிராக திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொண்டு வரும் சதிகள் இடம்பெறுவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் ஊடாகத் தீர்வு நிலையை அடையும் என்று ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் 7 ஆயிரம் பௌத்த விகாரைகள் காணப்படுகின்றன. அனைத்து பௌத்த துறவிகளும் எந்த அரசியல்வாதிகளுக்கும் அரசியல் கருத்துகளுக்கும் அடிபணியாமல் பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு செவிசாய்த்து அரசியல் ரீதியில் ஒரு தீர்மானத்தை முன்னெடுத்தால் பௌத்த மதத்தை எவ்வித ஆக்கிரமிப்புகளும் இன்றி பாதுகாக்கலாம்.

பல்லின மக்கள் வாழும் சமூகத்தில் அனைவரது மதச் சுதந்திரமும் பாதுகாக்கப்படவேண்டும். இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் இந்து ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் மதக் கொள்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்கின்றார்கள். ஆனால் பௌத்தமதக் கொள்கைகள் ஆரோக்கியமான முறையில் போஷிக்கப்படவில்லை.

பௌத்தமதம் எந்தளவிற்கு இன்று சவால்களை எதிர்கொண்டுள்ளது என்பது முல்லைத்தீவு நீராவியடி விவகாரத்தின் ஊடாக வெளிப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு நீராவியடிப் பிரதேசத்தில் 93 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிறிய பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அந்த வளவில் இருந்த ஒரு பிள்ளையார் சிலையை விகாராதிபதி விகாரைக்குள் வைத்துள்ளார்.

காலப்போக்கில் இந்தப் பிள்ளையார் சிலை விடயத்தில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கடும்போக்குடன் செயற்பட்டார்.

நீராவியடிப் பிள்ளையார் வளாகத்தில் பௌத்த பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து இந்து – பௌத்த மதங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் பின்னணியில் கிறிஸ்தவ மத அடிப்படைவாதமே செல்வாக்கு செலுத்தியது.

ஏப்ரல் 21 திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்குப் பின் இந்துக்களும் பௌத்தர்களும் ஒற்றுமையாகச் செயற்பட்டமைக்கு எதிராகவே கிறிஸ்தவ அடிப்படைவாதம் அரசியல் அடிப்படைவாதிகளுடன் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது – என்றார். (ஐ)

# சென்னை – யாழ். விமான சேவை திங்கள் முதல் வாரத்தில் 3 நாள்!

## பயண நேரம், கட்டணங்கள் அறிவிப்பு

கொழும்பு, நவ. 05
சென்னை யாழ்ப்பாணம் இடையே, வாரத்தில் மூன்று நாட்களுக்கு, அலையன்ஸ் எயார் நிறுவனம் விமான சேவைகளை வரும் 11ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பை அலையன்ஸ் எயர் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

முதற்கட்டமாக திங்கள், புதன், சனிக்கிழமைகளில் சென்னை யாழ்ப்பாணம் இடையிலான விமான சேவையை அலையன்ஸ் எயர் நடத்தவுள்ளது.

பின்னர், கூடிய விரைவில் இந்த சேவை, வாரத்தில் ஏழு நாள்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அலையன்ஸ் எயர் நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து காலை 10.35 மணிக்குப் புறப்படும், 9I 101 இலக்க விமானம், மதியம் 12 மணிக்கு யாழ்ப்பாணம் விமான நிலையத்தைச் சென்றடையும்.

பிற்பகல் 12.45 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 9I 102 இலக்க விமானம், பிற்பகல் 2.10 மணியளவில் சென்னையை வந்தடையும் என்றும் அலையன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் அனைத்துலக விமானநிலைய திறப்பு விழா இடம்பெற்ற கடந்த மாதம் 17ஆம் திகதி, அலையன்ஸ் எயர்



நிறுவனத்தின் விமானம் முதல் பயணத்தை மேற்கொண்டிருந்தது.

அதையடுத்து, நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் வழக்கமான சேவை ஆரம்பமாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சில நடைமுறைகளைச் சிக்கல்களை தீர்க்கவேண்டியிருந்ததால், சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதாக, எயர் இந்தியா நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, சென்னை – யாழ்ப்பாணம் இடையிலான விமானப் பயணக் கட்டணம் தொடர்பான அறிவிப்பையும் அலையன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான விமானக் கட்டணமாக 3,990 இந்திய ரூபாவும், வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் தனியாகவும் அறவிடப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கான விமானக் கட்டணமாக 45 அமெரிக்க டொலர் மற்றும் வரிகள், கட்டணங்களும் அறவிடப்படும் என்றும் அலையன்ஸ் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)




# 1,500 கோடி ரூபாவுக்குப் பினாமி பெயர்களில் சொத்துக்கள் சசிகலா வாங்கிக் குவித்தார் என்கிறது வருமான வரித்துறை

சென்னை,நவ.06

பணமதிப்பிழப்பு அறிவிக்கப்பட்டபோது சசிகலா ரூ.1,500 கோடிக்கு பினாமி பெயர்களில் சொத்துக்கள் வாங்கி குவித்தார் என வருமான வரித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய மத்திய அரசு 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி திடீரென ரூ.500 மற்றும் ரூ.1,000 நோட்டுகள் செல்லாது என்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டது.

ரூ.500, ரூ.1,000 நோட்டுகளை வைத்திருப்பவர்கள் வங்கிகளில் கொடுத்து அவற்றை மாற்றிக் கொள்ளலாம் என்று அவகாசம் வழங்கப்பட்டது. 50 நாள்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டது.

அந்தக் காலக்கட்டத்தில் ஜெயலலிதாவின் தோழி சசிகலா தன்னிடம் இருந்த 500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகளைப் பயன்படுத்தி சொத்துக்கள் வாங்கினார் எனக் கூறப்படுகிறது. சுமார் ரூ.1,500 கோடிக்கு அவர் அப்போது சொத்துக்களை வாங்கி குவித்தார் எனத் தெரிகிறது.

அந்த சொத்துக்கள் அனைத்தும் நிறுவனங்களாக வாங்கப்பட்டன. அந்த நிறுவனங்களை சசிகலா தனது பெயரிலோ அல்லது தனது குடும்பத்தினர் பெயரிலோ பதிவு செய்து மாற்றம் செய்து கொள்ளவில்லை. அதற்கு பதில் அந்த நிறுவனங்களின் உரிமையாளர்களின் பெயரிலேயே தொடர்ந்து செயல்பட அனுமதித்தார்.

ஆனால் அந்த நிறுவனங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் எனக் கூறப்படுகிறது.

சசிகலா மொத்தம் 7 நிறுவனங்களை அப்படி வாங்கினார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன. பெரம்பூரில் உள்ள ஸ்பெக்ட்ரம் மோல், கோவையில் செந்தில் பேப்பர் போர்டு, கோவையில் உள்ள ஸ்ரீலட்சுமி ஜுவல்லரி, புதுச்சேரியில் உள்ள ரிசார்ட் ஆகியவை சசிகலா வாங்கிய நிறுவனங்களில் அடங்கும் என்று தெரிகிறது.

இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது ஜெயலலிதா அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். அந்த சமயத்தில்தான் பணம் மதிப்பிழப்பு நோட்டுகளைப் பயன்படுத்தி அவர் இந்தச் சொத்துக்களை வாங்கினார் எனக் கூறப்படுகிறது.



சசிகலா ரூ.1,500 கோடிக்கு பினாமி பெயர்களில் சொத்துக்கள் வாங்கியிருப்பது பற்றி வருமான வரித்துறைக்கு அடுத்தடுத்து இரகசிய தகவல்கள் கிடைத்தன. இதைத் தொடர்ந்து கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிரடியாக சசிகலா குடும்பத்தினர் மற்றும் அவர்களது உறவினர்களின் வீடுகளில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

மொத்தம் 187 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வருமான வரித்துறை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு ஒரே நேரத்தில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. சென்னை ஈக்காட்டுதாங்கலில் உள்ள ஜெயா டி.வி. அலுவலகம், மிடாஸ் மதுபான ஆலை ஆகிய இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் வருமான வரித்துறை அதிகாரிகளின் சோதனை 5 நாள்களுக்கு நீடித்தது. இந்த 5 நாள்களும் ஏராளமான ஆவணங்கள், கணக்கில் காட்டாத பணம் என்பன சிக்கின. அந்த ஆவணங்களை வருமான வரித்துறை அதிகாரிகள் மூடை மூடையாகக் கட்டி எடுத்துச் சென்றனர்.

சென்னையில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் அந்த ஆவணங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டன. தனி அதிகாரிகள் குழு ஏற்படுத்தப்பட்டு செய் யப்பட்ட அந்த ஆய்வில் 60 போலி நிறு வனங்களை சசிகலா குடும்பத்தினர் நடத்தி வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் போலி நிறுவனங்கள் மூலம் ரூ.1,500 கோடிக்கு மேல் வருமான வரி ஏய்ப்பு செய்யப்பட்டு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதற்கிடையே சசிகலா குடும்பத்தினர் வீடுகளில் சிக்கிய பல ஆவணங்கள் பினாமி பெயர்களில் சொத்துக்கள் வாங்கி இருப்பதை உறுதிப்படுத்துவனவாக இருந்தன. இதையடுத்து சசிகலா குடும்பத்தினரை வருமான வரித்துறை அதிகாரிகள் சம்மன் அனுப்பி வரவழைத்து தீவிர விசாரணை நடத்தினார்கள்.

ஆவணங்களைக் காட்டி சசிகலா குடும்பத்தினரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது. அப்போது பினாமி பெயர்களில் சொத்துக்கள் வாங்கி இருப்பது வெட்ட வெளிச்சமானது. குறிப்பாக 2016 ஆம் ஆண்டு பணம் மதிப்பிழப்பு செய்யப்பட்டபோது பழைய ரூ.500 ரூ.1,000 நோட்டுகளைப் பயன்படுத்தி பல நிறுவனங்கள் வாங்கப்பட்டு இருப்பதும் தெரிய வந்தது.

இது தொடர்பாக வருமான வரித்துறை அதிகாரிகள் பெங்களூரு பரப்பன அக்ரஹாரம் சிறையில் உள்ள சசிகலாவிடமும் இளவரசியிடமும் விசாரணை நடத்தினார்கள். அவர்களிடமும் ஆவணங்களைக் காட்டி வருமான வரித்துறை அதிகாரிகள் கிடுக்கிப் பிடிக் கேள்விகளைக் கேட்டு பதில் பெற்றனர்.

சசிகலா குடும்பத்தினர் தெரிவித்த தகவல்களை வீடியோவில் பதிவு செய்து இருந்த வருமான வரித்துறையினர் அவற்றை மீண்டும் பார்த்து ஆய்வு செய்தனர். கடந்த 2 ஆண்டுகளாக இந்த ஆய்வுப் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது.

அப்போது பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களின்படி சசிகலா குடும்பத்தினர் பினாமி பெயர்களில் சொத்துக்கள் வாங்கி குவித்து இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. பினாமி பெயர்களில் அவர்கள் பல நிறுவனங்களை நடத்தி வருவதும் உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து பினாமி பெயர்களில் நடத்தப்பட்டு வந்த பல நிறுவனங்களை வருமான வரித்துறையினர் முடக்கி வைத்திருந்தனர். அந்த நிறுவனங்கள் மீது பினாமி சொத்து பரிமாற்ற சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முடிவு செய்தனர். அதன்படி வருமான வரித்துறையினர் சமீபத்தில் போலி நிறுவனங்களைக் கையகப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர்.

அதன்படி சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான பினாமி பெயர்களில் உள்ள 7 நிறுவனங்கள் தற்காலிகமாக கையகப்படுத்தப்பட்டு உள்ளன. பினாமி பெயர்களில் உள்ள அந்த 7 நிறுவனங்களும் ரூ.1,500 கோடிக்கு வாங்கப்பட்டு இருக்கின்றன என வருமான வரித்துறை அதிகாரிகள் தெரிவித்து இருக்கின்றனர் என ஆங்கில நாளிதழான டி.டி. நெக்ஸ்ட் தகவல் வெளியிட்டு உள்ளது.

அந்தத் தகவலில் மிக குறுகிய காலத்தில் பினாமி பெயர்களில் இந்தச் சொத்துக்கள் வாங்கப்பட்டு இருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

பினாமி பெயர்களில் உள்ள நிறுவனங்களைக் கையகப்படுத்தி இருப்பதை சிறையில் இருக்கும் சசிகலாவிடம் வருமான வரித்துறை அதிகாரிகள் அதிகாரப்பூர்வமாக தெரிவித்து இருக்கின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது.

## இடிந்து விழும் நிலையில் அரசின் கட்டடம்; ஹெல்மெட்டுடன் பணி செய்யும் ஊழியர்கள்!

### உத்தரப்பிரதேசத்தில் இந்த அவல நிலைமை



உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள உள்ள பாண்டாவின் செயல்பட்டு வரும் அரசு மின்சார வாரிய அலுவலகக் கட்டடம் எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயம் இருப்பதாக ஊழியர்களுக்குத் தெரியவந்தது. இதனையடுத்து ஊழியர்கள் தங்களுடைய உயரதிகாரியிடம் முறைப்பாடு அளித்துள்ளனர் ஆனால் இதுவரையில் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் அங்கு பணி புரிய கூடிய ஊழியர்கள் அனைவரும் ஹெல்மெட் அணிந்தபடி பணிகளை மேற்கொண்டு வரும் நிலை உருவாகியுள்ளது.

ஆனால் அரசு அலுவலகக் கட்டடத்தைப் பராமரிக்கவும் புது கட்டடம் கட்டித்தரவும் வழியில்லாத அம்மாநில அரசு, தற்போது பாரிய சிவன் சிலை கட்டுவதற்காக 300 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## லஞ்சம் கேட்ட பெண் தாசில்தாரை பெற்றோல் ஊற்றி எரித்த இளைஞர்

லஞ்சம் கேட்ட பெண் தாசில்தாரை எரித்து கொன்றார் எனக் கூறப்படும் இளைஞர் கைது செய்யப்பட்டார்.



தெலங்கானா மாநிலம் ரங்கா ரெட்டி மாவட்டத்திலுள்ள அப்துள்ளப்பூர்மெட் கிராமத்தில் தாசில்தாராக பணியாற்றி வந்த விஜயா ரெட்டியை, சுரேஷ் என்பவர் தமது நிலப் பிரச்சினை காரணமாக அவரது அறைக்குள் சென்று பார்த்துள்ளார். அப்போது நிலத்திற்கு பத்திரப்பதிவு செய்ய தாசில்தார் லஞ்சம் கேட்டார் எனத் தெரிகிறது. இதனால் ஆத்திரமடைந்த சுரேஷ், தாம் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை எடுத்து ஊற்றி, தாசில்தார் விஜயா ரெட்டி மீது தீ வைத்துள்ளார். விஜயா ரெட்டியின் அலறல் சத்தம் கேட்டு ஊழியர்கள் அறைக்குள் வருவதற்குள், அவர் உயிரிழந்தார். அங்கிருந்து தப்ப முயன்ற சுரேஷை, ஊழியர்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சுரேஷுக்கும் லேசான தீக் காயங்கள் இருந்ததால், அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பத்திரப் பதிவு செய்ய 2 மாதமாக அலைக்கழித்து லஞ்சம் கேட்டமையால் தாம் தாசில்தாரை எரித்துக் கொன்றார் என சுரேஷ் தெரிவித்துள்ளார்.

## ’ஏர் இந்தியா’ நிறுவனத்தை முழுமையாக தனியாருக்கு விற்க இந்திய அரசு முடிவு!

மும்பைகீ,நவ.06

’ஏர் இந்தியா’ நிறுவனத்தை முழுமையாக தனியாருக்கு விற்க அரசு முடிவு செய்துள்ளது. இந்நிலையில் ’ஏர் இந்தியா’வை வாங்குவது தொடர்பாக அந் நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவினரிடம் ஆலோசனை நடத்த உள்ளதாக டாடா குழுமத்தின் தலைவர் என்.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

அரசு விமான சேவை நிறுவனமான ’ஏர் இந்தியா’ தொடர் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதால் அதை விற்க அரசு கடந்த சில ஆண்டுகளாகவே முயற்சித்து வருகிறது.

முன்னதாக ’ஏர் இந்தியா’வின் 76 சதவீத பங்குகளை விற்று விட்டு, 24 சதவீத பங்குகளை மட்டும் தன் வசம் வைத்துக்கொள்ள அரசு திட்டமிட்டது. ஆனால் அதற்குப் பெரும்பாலான நிறுவனங்கள் ஒப்புக்கொள்ளாதமையால், ’ஏர் இந்தியா’வின் பங்கு விற்பனை நடவடிக்கை தோல்வியடைந்தது. இதையடுத்து அரசு 100 சதவீத பங்குகளை விற்று விடும் முடிவுக்கு வந்தது. தற்போது ’ஏர் இந்தியா’வின் பங்குகளை விற்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக எடுக்கப்பட்டு வருகின்றன.



’ஏர் இந்தியா’ ஜே.ஆர்.டி. டாடாவால் ’டாடா ஏர் சேர்வீசஸ்’ என்ற பெயரில் 1932 இல் தொடங்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பிறகு அது அரசு வசம் வந்தது. எனவே தற்போது ’ஏர் இந்தியா’ விற்பனைக்கு வருவதால் டாடா குழுமம் ஏர் இந்தியாவை வாங்குவதற்கு ஆர்வம் காட்டுகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# நேபாளத்தில் ஆற்றுக்குள் பஸ் விழுந்ததில் 17 பேர் பலி; 56 பேர் காயங்களுடன் மீட்பு

## மேலும் பலரைக் காணவில்லை; தேடுதல் தொடர்கிறது

காத்மாண்டு,நவ.06

நேபாளத்தில்ஆற்றுக்குள்பஸ்விழுந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

நேபாளநாட்டின்டோலாகாமாவட்டத்தில் இருந்து தலை நகர் காத்மாண்டுவுக்கு ஞாயிறன்றுபஸ்ஒன்றுபுறப்பட்டுசென்றது.

பஸ்ஸில் சிறுவர்கள், பெண்கள் உள்பட எழுபதுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர். சிந்துபால்சவுக் மாவட்டத்தில் உள்ள மலைப்பாங்கான சாலையில் பஸ் வேகமாக சென்றுகொண்டிருந்தது. அப்போது, பஸ் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் தறிக்கெட்டு ஓடிய பஸ், சாலையில் இருந்து விலகி 165 அடி ஆழத்தில் உள்ள சன்கோஷி ஆற்றுக்குள் விழுந்தது.

ஆற்றில் ஆழம் அதிகமாக இருந்ததால் பஸ் நீரில் மூழ்கியது. விபத்துக் குறித்துத் தெரியவந்ததும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் விரைந்து சென்று, தீவிர மீட்பு பணியில் இறங்கினர்.



மேலும் அவர்கள் அளித்த தகவலின் பேரில்பொலிஸார்மற்றும்மீட்புகுழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் மீட்பு படகுகளில் பஸ்ஸுக்குள் சிக்கியிருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

எனினும் 3 மாத பச்சிளம் குழந்தை மற்றும் 6 சிறுவர்கள் உள்பட 15 பேரின் உடல்கள் முதலில் மீட்கப்பட்டன. அதைத்தொடர்ந்து மேலும் இரண்டு உடல்கள் மீட்கப்பட்டமையால் பலியானோர் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்தது. மேலும் படுகாயங்களுடன் 56 பேர் மீட்கப்பட்டனர்.

அவர்கள் உடனடியாக அம்புலன்ஸுகள் மூலம் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

மேலும் ஆற்றுக்குள் பஸ் விழுந்து விபத்துக்குள்ளானதில் சிலர் மாயமாகி இருக்கிறார்கள். அவர்கள் கதி என்ன என்பது தெரியவில்லை. அவர்களைத் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டு உள்ளது.

விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை. இது குறித்து தீவிரமாக விசாரிக்கப்படுகிறது.

கடந்த மாதம் தலைநகர் காத்மாண்டுவுக்கு அருகே அளவுக்கு அதிகமான ஆள்களை ஏற்றி சென்ற பஸ், பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியானமையும், 100 நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தமையும் நினைவுகூரத்தக்கது.



# கிரீஸில் குளிரூட்டப்பட்ட வாகனத்தில் கடத்தப்பட்ட 41 பேர் பத்திரமாக மீட்பு



ஏதென்ஸ்,நவ.06

கிரீஸ் நாட்டில் குளிரூட்டப்பட்ட வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 41 அகதிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைவதற்காக வரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதால் அந்த நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. இதனைத் தடுக்கும் வகையில்பலநாடுகள்எல்லைப்பகுதியில்பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றன.

இவற்றை மீறி சட்டத்துக்குப் புறம்பான வகையில் கெண்டெய்னர்கள் மற்றும் கார், வான் உள்ளிட்ட வாகனங்களுக்குள் அகதிகள் மறைத்து வைக்கப்பட்டு ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு கடத்தப்படுகிறார்கள்.

பல மணி நேரம் அல்லது நாள் கணக்கில் ஒரே இடத்தில் அடைத்து வைக்கப்படும்போது மூச்சு திணறல் ஏற்பட்டு அகதிகள் இறந்துவிடுகின்றனர். கடந்த சில நாள்களுக்கு முன்பு இங்கிலாந்தில் கெண்டெய்னர் லொறிக்குள் 39 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் கிரீஸ் நாட்டில் இதே போன்ற குளிரூட்டப்பட்ட வாகனம் ஒன்றில் 41 அகதிகள் கொண்டு செல்லப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. வடக்கு கிரீஸ் பகுதியின் தேசிய நெடுஞ்சாலையில் காவல்துறையினர் வாகன பரிசோதனையில் ஈடுபட்டிருந்த போது வாகனம் ஒன்றில் அகதிகள் கொண்டு செல்லப்படுவதைக் கண்டுபிடித்தனர்.

அவர்களில், சிலரின் உடல்நிலையை பரிசோதனை செய்ய அருகில் உள்ள மருத்துவமனைக்கு அவர்களை அழைத்துச் சென்றனர். மற்றவர்களை காவல. நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். வாகனத்தை ஓட்டிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இது குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# ஈராக்கில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு; தடியடி; 5 பேர் பலி



பாக்தாத், நவ.06

ஈராக்கில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலியாகினர்.

ஈராக்கில் ஊழல் மற்றும் வேலையின்மை அதிகரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்நாட்டுமக்கள் அரசுக்கு எதிராகப்போராட்டத்தில் குதித்தனர். கடந்த மாதம் முதலாம் திகதி தொடங்கி நடந்து வரும் இந்தத் தொடர் போராட்டத்தில் இதுவரை 250 க்கும் அதிகமானோர் பலியாகி விட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை அரசு இதுவரை முறையாக அறிவிக்கவில்லை.

இந்த நிலையில், தலைநகர் பாக்தாத்தில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கர்பாலா நகரில் உள்ள ஈரான் நாட்டின் தூதரகத்தின் முன்பு நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கர்பாலா நகர் சுதந்திரம் பெற்றுவிட்டதாகவும், ஈரான் தூதரகம் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முழங்கினர்.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் தூதரகத்தின்நுழைவாயிலில்டயர்களைதீவைத்து கொளுத்தினர். மேலும் தூதரகத்தின் சுற்று சுவர் மீது கற்களையும், வெடி பொருள்களையும் வீசி எறிந்தனர்.

இதையடுத்து போராட்டக்காரர்களை விரட்டியடிக்க பாதுகாப்பு படைவீரர்கள் தடியடி நடத்தியமையோடு, கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வீசினர்.

ஆனாலும் நிலைமை கட்டுக்குள் வராததால் பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் போராட்டக்காரர்கள் 5 பேர் பலியாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இதற்கிடையே பாக்தாத்தில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் அமைந்துள்ள பசுமை மண்டலம் பகுதிக்கு செல்லும் மேம்பாலத்தில் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் திரண்டு போக்குவரத்தை முடக்கினர்.


# பாக். பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக முழு நாட்டையும் ஸ்தம்பிக்க வைப்போம்

## மதகுரு மவுலான பஸ்லூர் ரெஹ்மான் எச்சரிக்கை

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் அரசியல் எதிரியான மதகுரு மவுலான பஸ்லூர் ரெஹ்மான் தாங்கள் பாகிஸ்தான் முழுவதையும் ஸ்தம்பிக்க வைப்பார்கள் என எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு மதகுரு மவுலான பஸ்லூர் ரெஹ்மான் வழங்கிய இரண்டு நாள் இறுதி எச்சரிக்கை ஞாயிற்றுக்கிழமை இரவு முடிவடைந்த நிலையில் ஜமியத் உலமா இ இஸ்லாம் (ஜே.யு.ஐ.எவ்.) தலைவர் மவுலானா பஸ்லூர் ரெஹ்மான், எதிர்ப்பாளர்கள் தங்கள் இலக்குகளை அடையும் வரை உள்ளிருப்பு போராட்டத்தை தொடருவார்கள் என்று கூறியுள்ளார்.இஸ்லாமாபத்தில் நடைபெற்ற ஆசாத்தி பேரணியில் உரையாற்றிய பஸ்லூர் ரெஹ்மான் கூறியவை வருமாறு:-

நாங்கள் எந்தவொரு தீர்ப்பாயம் அல்லது தேர்தல் ஆணையம் அல்லது எந்த நீதிமன்றத்திற்கும் செல்ல வேண்டாம் என்று முடிவு செய்துள்ளோம். இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ-இன்சாஃப் வெளிநாட்டு நிதி வழக்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் தேர்தல் ஆணையத்திடம் உள்ளது.



இந்த சட்டவிரோத ஆட்சியாளரின் வெளிநாட்டு நிதி வழக்கு முடிவு செய்யப்படவில்லை. இந்தத் தேர்தல் ஆணையம் மோசடி வழக்குகளை எப்படித் தீர்க்கும்?

இந்தப் பேரணிக்குப் பிறகு, நாங்கள் எங்கள் பயணத்தை நிறுத்த மாட்டோம். இன்று, நாம் இஸ்லாமாபாத்தை ஸ்தம்பிக்க வைத்துள்ளோம்.

நாளை நாம் நாடு முழுவதையும் ஸ்தம்பிக்க வைப்போம். - எனக் கூறினார்.

காலைக்கதிர் Kalaikathir



# இவருக்குத்தான் வாக்களியுங்கள் என்று மக்களிடம் கோர எமக்கு உரிமையில்லை

## சுரேஷ் பிறேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 06

ஜனாதிபதித் தேர்தலில் தமது எதிர்காலம் தமது பாதுகாப்பு, தமது சுயமரியாதை, தமது இருப்பு இவற்றை முன்னிறுத்தி தமிழ்மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைப்பது நியாயமானதே. அவ்வாறான கோரிக்கைகள் தொடர்பாக பேசவோ, அல்லது ஓர் உடன்பாட்டிற்கு வரவோ மறுக்கின்ற கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு எமது மக்களைக் கோருவதற்கு எமக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது – இவ்வாறு ஈ.ஆர்.எல்.எவ்வின் தலைவர் க.சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிலைப்பாடு என விடுத்துள்ள அறிக்கையையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

பிரித்தானிய காலனியாதிக்கத்தின் இறுதிப் பகுதியிலிருந்தே சிங்கள, பௌத்த மேலாதிக்கச் சிந்தனை மேலோங்கியதன் காரணமாக இந்த நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பிரித்தானியர்களிடமிருந்து சூழ்ச்சிகரமான முறையில் தமிழ் மக்களின் இறைமையைப் பறித்துக்கொண்ட சிங்கள, பௌத்த தேசியம் தொடர்ந்தும் தமிழ்த் தேசிய இனத்தை இரண்டாந்தரக் குடிமக்களாகவும் தனது மேலாதிக்க சிந்தனைக்கு அடிபணியும் சக்தியாகவும் மாற்ற முற்பட்டது.

தமிழ்த் தேசிய இனத்தை அழித்தொழிப்பது மற்றும் அதனை தன்னுடன் இரண்டறக் கலக்கச் செய்வது என்னும் கோட்பாட்டை சிங்கள தேசியம் வெகு கச்சிதமான முறையில் நன்கு திட்டமிட்ட முறையில் கட்டமைக்கப்பட்ட வடிவத்தில் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்த் தேசிய இனம் தனது அடையாளத்தையும், உரிமைகளையும் சுயமரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதற்காகவே சிங்கள, பௌத்த மேலாதிக்கவாதத்திற்கு எதிராக பலவழிகளிலும் போராடி வருகின்றது. இந்த யதார்த்தம் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இதுவரைகாலமும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் தென்னிலங்கை ஆளும் வர்க்கங்களைச் சேர்ந்த இரண்டு பிராதன அரசியல் கட்சிகளும் போட்டியிட்டன. ஆனால் தேர்தலில் வெற்றி பெற்ற கையுடன் தமது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு மீண்டும் மீண்டும் தமிழ்த் தேசிய இனம் ஏமாற்றப்பட்டதே இந்நாட்டின் வரலாறு.

சட்டவாக்கல் சபையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும் என்று ஆரம்பித்த தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கான போராட்டம் சிங்கள மேலாதிக்கவாதிகளால் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டதன் காரணமாக, சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தும் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தும் சாத்வீகமுறையில் முன்னெடுக்கப்பட்டது. இவை அனைத்தும் ஆளும் வர்க்கத்தின் அராஜக நடவடிக்கையின் மூலமாக ஆயுத முனையில் அடக்கியொடுக்கப்பட்டதன் விளைவாகத் தனது இருப்பைக் காப்பதற்கும் சுயமரியாதையை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் தனது இனத்தினை அழிவிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கும் தமிழ்த் தேசிய இனமும் இலங்கை அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டது.



ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் விடுதலைக்கான போராட்டமானது, இலங்கை அரசினால், சர்வதேச சக்திகளை பிழையாக வழிநடத்தி பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் 2009 ஆம் ஆண்டு மௌனிக்கச் செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதிலிருந்து தற்பொழுது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல்வரை தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் ஐக்கியப்பட்டு தமது உள்ளக்கிடக்கையை ஜனநாயக வழியில் வலியுறுத்தி வந்தனர். ஆனால் இந்த ஐக்கியத்தை இலங்கை தமிழரசுக் கட்சி தனது வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக்கொண்டு அர்ப்ப சொற்ப சலுகைகளுக்காகவும் தமக்கு விசுவாசமானவர்கள் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காகவும் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் காலடியில் மண்டியிட வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கான போராட்டம் நியாயமானது என்பதை சர்வதேச சமூகமும், ஐ.நா.மனித உரிமை ஆணையகமும் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்க இருந்த நேரத்தில் அதனை எமது மக்களுக்குச் சாதகமாக மாற்றுவதை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் இலங்கை தமிழரசுக் கட்சி தனது சுயநலனுக்காக இலங்கை அரசை சர்வதேச சமுதாயத்தின் பிடியிலிருந்து பிணையெடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு தமக்கான நலன்களை அதற்குப் பிரதியுபகாரமாகப் பெற்றுக்கொண்டது.

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்திய –இலங்கை ஒப்பந்தத்தினூடாக ஒரு தீர்வினைக் காண்பதற்கு முயற்சித்த போதும்கூட, அது முழுமையான தீர்வாக அமையவில்லை என்ற காரணத்தால் அதனை முழுமைபெறச் செய்வதற்காக அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ, மங்களமுனசிங்க என்னும் நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் தெரிவுக்குழு ஒன்றை நியமித்தார். பின்னர் வந்த சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அம்மையாரும் 2000 ஆம் ஆண்டளவில் ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைத்த போதும் நாடாளுமன்றத்தில் அது அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியினால் முறியடிக்கப்பட்டது.

போர் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர், 13ஆவது திருத்தத்திற்கு மேலே சென்று, தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக இந்திய அரசுக்கும் ஐ.நா செயலாளர் நாயகத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பல உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். இதன்பிரகாரம் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையில் ஒரு சர்வகட்சிக்குழு நியமிக்கப்பட்டது.

அதுமாத்திரமல்லாமல் அப்போது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அரசுடன் பதினெட்டு சுற்றுக்கள் பேச்சுக்கள் நடாத்தி அதுவும் எத் தகைய முன்னேற்றமும் இன்றி முடிவடைந்தது.

தற்போதைய மைத்திரி – ரணில் ஆட்சியில் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதாகக் கூறி, 83 தடவைகளுக்கும் மேல் இவர்கள் பேசியும்கூட ஏறத்தாழ ஐந்து வருடத்தில் புதிய அரசமைப்பைக் கொண்டு வரமுடியவில்லை.

இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை ஒன்று இருக்கின்றதென்பதும் அதற்கு நியாயமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்ற அடிப்படையிலுமே இந்தத் தீர்வுத்திட்டங்களும் பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் அவர்களது கட்சிகளும் சிங்கள, பௌத்த மேலாதிக்கம் பற்றி பேசுகின்றார்களே தவிர, தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருக்கின்றது என்ற விடயத்தை முற்று முழுதாக தங்களது நிகழ்ச்சி நிரலிலிருந்து அகற்றிவிட்டு, தமிழ் மக்கள் மத்தியில் வாக்கு வேட்டைக்காகச் செல்கின்றார்கள்.

இதனை இன்னும் சிறப்பாகக் கூறுவதாக இருந்தால், தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை என்ற ஒன்று இந்த நாட்டில் இல்லை என்பது போன்றும் தமிழ்த் தரப்பால் அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றபோது அது ஒரு இனவாத கோரிக்கை போன்ற பொய்யான பரப்புரைகளை முன்னெடுத்து, தமிழ் மக்களுக்கான அடிப்படை உரிமைகளைக் கொடுக்க மறுக்கின்ற ஒரு நிலமையை நாங்கள் கண்கூடாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற சிங்கள அரசியல் கட்சிகளின் மேற்சொன்ன போக்கானது தமிழ் மக்களுக்கு தேசிய இனப்பிரச்சினை என்றஒன்றே இல்லைஎன்றஒருபிம்பத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டில் வெறுமனே பொருளாதார அபிவிருத்தியை மட்டும் மேற்கொண்டால் போதுமானது என்ற மாயையைச் சர்வதேச சமூகத்திற்கு ஏற்படுத்த முயற்சிக்கின்றது. இது தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையான இந்த மண்ணில் அவர்கள் சுயாதிபத்தியத்துடனும், சம அந்தஸ்துடனும், தலை நிமிர்ந்து வாழக்கூடிய அவர்களின் நியாயமான வேணவாக்களை நிராகரிக்கும் போக்கு என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களது தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும். அவர்களது நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான முழுமையான விசாரணைகள் நடைபெறவேண்டும். வடக்கு – கிழக்கில் உள்ள பெருமளவிலான இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் . அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். பல்வேறுபட்ட போர்வைகளில் தமிழர் நிலங்கள் பறிமுதல் செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும். இறுதி போரின் போது நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவை சர்வதேச நியமங்களுக்கு அமைய விசாரிக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை தமிழர் தரப்பு முன் வைத்தபொழுது, இவை அனைத்துமே இனவாதக் கோரிக்கைகள் என்றும், இவை தொடர்பாக பேச்சுக்களையே நடத்த முடியாதென்றும் ஆனாலும் தமிழர் வாக்குகள் எமக்குத்தான் கிடைக்கும் என்றும் பரப்புரைகளை முன்னெடுத்து வரும் இந்த வேட்பாளர்கள் மறுதலையாக கொலை, கொள்ளை, கடத்தல், கப்பம் வேண்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டு இலங்கை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் படையினரை உடன் விடுவிப்போம் என்பதும் போர்க் குற்றங்கள் என்ற ஒரு விடயமே இந்த நாட்டில் இல்லை என்றும், யாருக்கு எதிராகவும் விசாரணை கள் மேற்கொள்ளப் படமாட்டாது, பழையன வற்றை மறந்து, எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும்படியும் இவர்கள் கூறுவதானது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்தவிதமான நியாயங்களும் கிடைக்கா என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் புதிய ஜனாதிபதி ஆற்ற வேண்டிய கடமைகள் தொடர்பாகவும் ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பிலும் பதின்மூன்று அம்சக் கோரிக்கைகளை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஐந்து அரசியல் கட்சிகளும் வடக்கு –கிழக்கு பல்கலைக்கழக சமூகமும், தமிழ் சிவில் சமூக அமைப்புக்களும் முன்வைத்திருந்தோம்.

அதனை ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது அதுதொடர்பான கலந்துரையாடலை நடாத்துவதற்கோ அல்லது அது தொடர்பில் ஓர் உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கோ எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரும் முன்வரவில்லை என்பதை எமது மக்களுக்கு நாம் தெரிவித்துக்கொள்கிறோம்.

இருந்தபொழுதும்கூட, சஜித் பிரேமதாசவின் தேர்தல் அறிக்கையில் கடந்த ஐந்து வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும், அது பொது வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக நிறைவேற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமல், புதியதோர் அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது என்பதுடன், அப்படி நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே அது ஒரு பொது வாக்கெடுப்புக்கு முன்னெடுத்துச் செல்லப்படலாம். ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்த கடந்த ஐந்தாண்டுகளில் செய்ய முடியாத புதிய அரசமைப்பு விடயத்தை குறைந்தபட்சம் அறுதிப் பெரும்பான்மையே இல்லாத இன்றைய அரசால் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

ஆகவே தமிழ் மக்களின் கண்துடைப்பிற்காகவே அவரது தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என நாம் கருதுகின்றோம். கடந்த ஐந்தாண்டுகளில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு குறித்து பேசப்பட்டதே தவிர, சமஷ்டிக்குள் அதிகாரப்பகிர்வு குறித்து பேசப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் காணிகளை விடுவிப்பதற்காக ஜனாதிபதியினால் மூன்றுமுறை காலக்கெடு விதிக்கப்பட்டும்கூட அவர் உறுதியளித்தவாறு காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதே நேரம், காணிகளை விடுவிக்கக் கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரியும் நீண்ட போராட்டங்கள் நடைபெறுகின்றபொழுதும்கூட, இந்தவிடயங்கள் தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(9 ஆம் பக்கம் பார்க்க..)

# கோட்டாவின் வெற்றியே இந்திய மத்திய அரசின் எதிர்ப்பார்ப்பாம்!



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இழைக்கப்பட்ட தவறுகள் காரணமாக, தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கை வலுவிழந்து விட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியும், முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவிக்கின்றார்.

பி.பி.ஸி. தமிழுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியி லேயே விநாயகமூர்த்தி முரளிதரன் இதனைக் குறிப்பிட்டார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததை அடுத்து, இந்திய அரசாங்கத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பகைத்துக்கொண்டதாகக் கூறிய கருணா அம்மான், அதனூடாகவே தமிழீழப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

தமிழீழப் போராட்டத்திற்கு முன்னர் இந்தியா ஆதரவை வழங்கிய போதிலும், விடுதலைப் புலிகளின் தவறுகள் காரணமாக இந்தப் போராட்டம் வெல்ல முடியாத ஒரு போராட்டமாக மாற்றம் பெற்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இனிவரும் காலங்களில் தனிநாட்டுக் கோரிக்கைக்கான போராட்டமொன்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் கூறுகிறார்.

இலங்கை என்ற ஒருமித்த நாட்டிற்குள் ஓர்அதிகாரப் பகிர்வு என்ற கோரிக்கைக்கு அமையவே தற்போது பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன எனக் குறிப்பிட்ட கருணா அம்மான், இனி ஒருமித்த நாட்டிற்குள் அதிகார பகிர்வுக்கான தீர்வே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி உள்ளிட்ட அதிகாரங்கள் வழங்கப்படுவதன் ஊடாக தமிழர்களுக் கான உரிமையைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அவர் கூறுகிறார்.

### ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவின் ஆதிக்கம்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை இந்தியா மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தெரிவித்த கருணா, கடந்த காலங்களில் சீனா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு நேரடியாக உதவிகளை வழங்கியமையினால், இந்தியாவிற்குத் தொடர்ந்தும் இலங்கை மீது சந்தேகம் நிலவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிராந்தியத்தில் நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் மஹிந்த ராஜபக்ஷ, அவரது காலகட் டத்தில் மிகத் தெளிவாக இருந்தார் எனக் கூறிய கருணா அம்மான், அதனால் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை விடயத்தில் தலையீடு செய்வதை இந்தியா ஒருபோதும் விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணப்பாட்டிலேயே இந்திய மத்திய அரசாங்கம் இருக்கின்றது எனவும் கருணா அம்மான் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இந்திய அரசாங்கத்தினால் 40,000 வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டதாகவும், விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களைப் புனர்வாழ்வளிக்க இந்தியா உதவிகளை வழங்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், நிதியுதவிகளை வேகமாக வழங்கும் நாடுகளில் சீனா முக்கிய இடத்தை வகித்தமையினால், சீனா அரசாங்கத்தின் தேவை இலங்கைக்கு அன்று அத்தியாவசியமாகக் காணப்பட்டதாகவும் கருணா அம்மான் குறிப்பிட்டார்.

நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனேயே அன்றைய இலங்கை அரசாங்கம் சீனாவுடன் கைகோர்த்ததே தவிர, இந்தியா போன்ற வல்லாதிக்க நாடுகளை எதிர்ப்பதற்காக சீனாவுடன் இணையவில்லை எனவும் அவர் கூறினார்.

### கூட்டமைப்பின் நிலைமை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்தை கடத்தும் ஒரு கட்சியாக மாற்றமடைந்துள்ளதாக விநாயகமூர்த்தி முரளிதரன் கூறுகின்றார்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிய போதிலும், தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு சக்தியாகவே அந்தக் கட்சி செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதிக்கம் இன்று வலுவிழந்துள்ளதாகவும் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) கூறுகின்றார்.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷவிற்கோ அல்லது சஜித் பிரேமதாஸவிற்கோ ஆதரவை வழங்குங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுவதாக இருந்தாலும், கூட்டமைப்பிற்கு தற்போதுள்ள செல்வாக்கும் குறையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

## இப்படிக் கூறுகின்றார் கருணா

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தை நிறைவு செய்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரம் செய்ததைக் கூறிய கருணா அம்மான், அவ்வாறென்றால், பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஏன் ஆதரவளிக்க மறுப்புத் தெரிவிக்கிறது என்ற கேள்வியையும் எழுப்புகிறார்.

### ஈஸ்டர் தாக்குதல் குறித்த நிலைப்பாடு

திட்டமிடப்பட்ட இனசுத்திகரிப்பிற்கான தாக்குதலாகவே தான், ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதலை அவதானிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதியும், முன்னாள் பிரதி அமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவிக்கின்றார்.

கொள்கை இல்லாத, நோக்கம் இல்லாத ஒரு தாக்குதல் என்ற அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதனாலேயே இந்த தாக்குதலை திட்டமிட்ட இனசுத்திகரிப்பிற்கான தாக்குதல் எனத் தான் கூறுகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவிதக் குரோதங்களும், எந்தவிதத் தொடர்புகளும் இல்லாத அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தினால் விடப்பட்ட தவறுகளே இந்தத் தாக்குதலுக்கான காரணம் எனவும் அவர் கூறுகின்றார்.

பாதுகாப்பு தளர்த்தப்பட்டு, புலனாய்வு துறை, இராணுவம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் நாட்டின் பாதுகாப்பு தற்போது உறுதிப்படுத்தப்பட வேண்டிய நிலையில் காணப்படுவதாக கூறிய அவர், கோட்டாபய ராஜபக்ஷவினால் மாத்திரமே அதனை உறுதி செய்ய முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தைத் தான் காட்டிக் கொடுத்தார் என கூறும் விடயமானது, ஒரு தவறான பிரசாரம் என விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை கருணா அம்மான் காட்டிக் கொடுத்தார் என எழுப்பப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை பேச்சின் ஊடாக வெற்றிக் கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன், நோர்வே போன்ற நாடுகளுடன் பேச்சுகளை நடத்த ஆரம்பித்ததாகவும் அவர் கூறினார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும், அப்பாவி உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் எனவும் தான் ஓர் எண்ணத்தைக் கொண்டிருந்தார் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், தனது அந்த நிலைப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விரும்பவில்லை எனக் கூறிய அவர், அதனால் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தான் வெளியேறினார் எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கருணா அம்மான் மாத்திரமே காட்டிக் கொடுத்தார் என விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் கூறவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

எனினும், விடுதலைப் போராட்டம் தொடர்பில் அறியாத நடுவிலுள்ள சிலரே தான் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தார் எனப் பிரசாரம் செய்துவருகின்றனர் எனவும் கருணா தெரிவிக்கிறார்.

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் புதிய ஜனாதிபதி வந்தால் இவற்றிற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது. இதே உத்தரவாதங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் மைத்திரிபால சிறிசேனவினாலும் நல்லாட்சி அரசாலும் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே இவை அனைத்தும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன எனத் தோன்றுகின்றது.

மறுபுறத்தில் பொதுஜன பெரமுனவையும் அதன் வேட்பாளரையும் பார்க்கின்றபொழுது, அவர்கள் அதிதீவிரவாத இராணுவவாதக் கண்ணோட்டம் உள்ளவர்களாகவும், நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற அடிப்படையில், தமிழ் மக்களை அடக்கி ஆள்வதே அவர்களின் நிலைப்பாடாகவும் தோன்றுகின்றது. நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பாகவும், பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் மாத்திரமே இவர்களால் பேசப்படுகின்றது என்பதுடன், தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாகவோ, அவற்றிற்கான தீர்வு எவ்வாறு இருக்கும் என்பது தொடர்பாகவோ தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவோ இவர்களது தேர்தல் அறிக்கையில் எதுவுமே கூறப்படவில்லை.

அத்துடன் தமிழ் மக்கள் இன்று முகங்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு இவர்கள் முன்னெடுத்த போரும் இவர்களது இனவாத அரசியல் செயற்பாடுகளுமே காரணமாக அமைந்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் குறித்துரைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டிய ஒருவராக இவர் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறார். இவரும் கூட, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களுக்குச் சென்று தமிழ் மக்களின் வாக்குகளைக் கேட்டு நிற்கின்றார்.

சிங்கள மக்களின் வாக்குகளால் நான் வெல்வேன் என்று கூறிவந்த பொதுஜன பெரமுனவின் வேட்பாளரான கோட்டாபய, தற்பொழுது தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்றும் வடக்கு – கிழக்கை அபிவிருத்தி செய்வோம் என்றும் தேர்தல் காலத்தில் பசப்புரைகளைச் செய்து வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் என்பது முழுநாட்டையும் ஒரே தேர்தல் தொகுதியாக முன்னிறுத்தி நடத்தப்படுகின்ற தேர்தல். அதே சமயம், இலங்கை ஒரு பல இனங்கள், பல மொழிகள், பல மதங்களைக் கொண்ட ஒரு நாடு. இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடி வந்திருக்கின்றார்கள். இது ஒரு பெரும் போராகவும் கடந்த முப்பது வருடகாலமாக நடைபெற்று வந்திருக்கின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமது எதிர்காலம் தமது பாதுகாப்பு, தமது சுயமரியாதை, தமது இருப்பு இவற்றை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைப்பது நியாயமானதே. அவ்வாறான கோரிக்கைகள் தொடர்பாக பேசவோ, அல்லது ஓர் உடன்பாட்டிற்கு வரவோ மறுக்கின்ற கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு எமது மக்களைக் கோருவதற்கு எமக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது – என்றுள்ளது. (ஐ)

# மீண்டும் இங்கிலாந்தை பந்தாடியது நியூஸிலாந்து!

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது ரி –20 போட்டியில், நியூஸிலாந்து அணி, 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், ஐந்து போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில், நியூஸிலாந்து அணி 2 – 1என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

நெல்சன் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, ஆறுதல் அளிக்கும் ஆரம்பத்தை பெற்றுக்கொண்டது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான மார்டின் கப்டிலும், கொலின் முன்ரோவும் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக்காக 40 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துக் கொண்டனர்.

இதன்போது, மார்டின் கப்டில் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்த ஓவரின் மற்றொரு ஆரம்ப துடுப்பாட்ட வீரரான கொலின் முன்ரோவும் 3 ஓட்டங்களுடன் ஏமாற்றினார்.

இதனைத் தொடர்ந்து ஜோடி சேர்ந்த டிம் செய்பர்ட் மற்றும் கொலின் டி கிராண்ட்ஹோமி 27 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர, டிம் செய்பர்ட் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம்புகுந்த அனுபவ வீரர் ரோஸ் டெய்லர், கொலின் டி கிராண்ட்ஹோமியுடன் இணைந்து 66 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தார்.

இதன்போது, கொலின் டி கிராண்ட்ஹோமி 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ரோஸ்டெய்லரும் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பிறகு அடுத்தடுத்து களமிறங்கிய ஜேம்ஸ் நீம் 20 ஓட்டங்களுடனும், மிட்செல் சான்ட்னர் 15 ஓட்டங்களுடனும்



ஆட்டமிழக்க, டிம் சவுத்தீ 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

இதன்படி நியூஸிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதன்போது இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில், டொம் கர்ரன் 2 விக்கெட்டுகளையும், சேம் கர்ரன், சக்யுப் மொஹமத், பெட்ரிக் பிரவுண் மற்றும் மெத்தியூ பார்க்கிஸன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 181 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, சிறப்பான ஆரம்பத்தை பெற்றுக்கொண்டாலும், மத்திய வரிசையில் களமிறங்கிய வீரர்கள் சோபிக்கத் தவறினர்.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான டொம் பென்டொன் மற்றும் டாவிட் மாலன் ஆகியோர் இணைந்து ஆரம்ப விக்கெட்டுக்காக 27 ஓட்டங்களை பகிர்ந்துக் கொண்டனர்.

இதன்போது டொம் பென்டொன் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து களமிறங்கிய ஜேம்ஸ் வின்ஸ் களத்தில் நங்கூரமிட்டார்.

டாவிட் மாலன் மற்றும் ஜேம்ஸ் வின்ஸ் ஆகியோர் இணைந்து 63 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளை, துரதிஷ்டவசமாக டாவிட் மாலன் 55 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

ஜேம்ஸ் வின்ஸ் ஒருபுறம் ஆறுதல் அளிக்கும் வகையில் துடுப்பெடுத்தாடினாலும், அடுத்து களமிறங்கிய எந்த வீரர்களும் அணிக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கவில்லை.

அணித்தலைவர் ஓய்ன் மோர்கன் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சிறப்பாக துடுப்பெடுத்தாடி வந்த ஜேம்ஸ் வின்ஸ் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார்.

இதன்பிறகு களமிறங்கிய சேம் பிளிங்ஸ் 1 ஓட்டத்துடனும், சேம் கர்ரன் 2 ஓட்டங்களுடனும், லீவிஸ் கிரிகோரி ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும், ஆட்டமிழந்தனர்.

டொம் கர்ரன் ஆட்டமிழக்காது 14 ஓட்டங்களுடனும், சக்யுப் மொஹமத் ஆட்டமிழக்காது 3ஓட்டங்களுடனும் களத்தில் இருக்க, இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் நியூஸிலாந்து அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதில் நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில், லொக்கி பெர்குசன் மற்றும் பிளாயர் டிக்னர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், இஷ் சோதி மற்றும் மிட்செல் சான்ட்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 35 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 5 பவுண்ரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட கொலின் டி கிராண்ட்ஹோமி தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான நான்காவது ரி –20 போட்டி, எதிர்வரும் 8ஆம் திகதி நேப்பியர் மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# ஐ.பி.எல். போட்டி அமைப்பில் புதிய முறை அறிமுகமாகிறது!



இந்தியாவில் நடைபெறும் ரி – 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயார்படுத்தல்களை, ஒவ்வொரு அணிகளும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

அந்த வகையில் தற்போது ஒவ்வொரு அணிகளும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலைவிரிக்கின்றன.

இதற்கமைய 2020ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான தயார்படுத்தல்களை ஐ.பி.எல். தொடரில் முதல்முறை சம்பியன் கிண்ணத்தை வென்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, டெல்லி கேபிடள்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மற்றும் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன.

இதற்கிடையில் போட்டித் தொடர் அமைப்பில் புதிய மாற்றம் கொண்டு வர ஐ.பி.எல். நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

பவர் பிளேயர் என்ற பதிலி வீரர்கள் களமிறக்கும் புதிய முறையை அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு அணியின் 11 பேர் இல்லாமல் உள்ள வீரரை, விக்கெட் விழும் போதும், அல்லது பந்து வீச்சாளரை மாற்றி களமிறக்குதல் பவர் பிளேயர் முறை எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக மும்பையில் நாளை கூடவுள்ள ஐ.பி.எல. உயரதிகாரக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளது.

குழுத் தலைவர் பிரிஜேஷ் பட்டேல் மற்றும் இதர நிர்வாகிகளுடன் இது தொடர்பாக ஆலோசனை செய்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் சௌரவ் கங்குலி இறுதி முடிவெடுப்பார். இந்த திட்டம் கிரிக்கெட் விளையாட்டின் அடிப்படை தன்மையையே மாற்றும் வகையில் உள்ளது.

மேலும், இதே முறையை விரைவில் நடக்கவுள்ள உள்ளூர் தொடரான சையத் முஷ்டாக் ரி – 20 தொடரிலும் அறிமுகம் செய்யலாம் என ஒரு தரப்பினர் கூறியுள்ளனர்.

இதுபோன்ற புதிய முறையை அறிமுகம் செய்யும் போது, புக்கி மற்றும் தரகர்களால் ஏற்படும் முறைகேடு பிரச்சினையை பி.சி.சி.ஐ. ஊழல் தடுப்புக் குழு எவ்வாறு சமாளிக்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதுபோன்ற சீரற்ற வகையில் பதிலி வீரர்களை தேர்வு செய்வது, புக்கிகள் மற்றும் போட்டி சூதாட்டம் செய்வோர் முழு நேரம் செயல்பட உத்வேகம் தரும் என ஒரு தரப்பு நிர்வாகிகள் கூறியுள்ளனர்.

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இத்தொடருக்கான ஐ.பி.எல். ஏலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறவுள்ளது.

2021ஆம் ஐ.பி.எல். ஏலத்தில் அனைத்து அணிகளும் 5 வீரர்களை மட்டும் தக்கவைத்துக்கொண்டு இதர வீரர்களை ஏலத்தில் மட்டுமே தேர்வு செய்யமுடியும். இதனால் இந்த வருட ஐ.பி.எல். ஏலம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த வருடம் பெரிய ஏலத்தை மனத்தில் கொண்டு இந்த வருட ஏலத்தில் வீரர்களை அணிகள் தேர்வு செய்யவுள்ளன.

அடுத்த ஆண்டு ஆஸ்ரேலியாவில் ரி – 20 உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளதால், எதிர்வரும் ஐ.பி.எல். தொடர் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த 12ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தியை 8.40 கோடி ரூபாவுக்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. அதே விலைக்கு, ஜெய்தேவ் உனத்கட்டை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது.

இவர்கள் இருவரும்தான், கடந்த ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலை போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 12 ஐ.பி.எல். தொடர்களில், டெல்லி கேப்பிடல்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் மற்றும் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் ஆகிய அணிகள் சம்பியன் பட்டத்தை வென்றதே கிடையாது.

ராஜஸ்தான் றோயல்ஸ், டெக்கன் சார்ஜஸ் மற்றும் சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகள் தலா ஒருமுறையும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மூன்று முறையும், கொல்கத்தா அணி இரண்டு முறையும், மும்பை இந்தியன்ஸ் அணி நான்கு முறையும் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளன. (ஐ)

# ரி — 20 உலகக்கிண்ண முதல் ஆட்டத்தில் மோதவுள்ள இலங்கை — அயர்லாந்து

ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் ரி –20 உலகக்கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான முதலாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் மோதவுள்ளன.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் ரி –20 உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிப் போட்டிகள் முடிவடைந்ததை அடுத்து தொடரின் அட்டவணை ஐ.சி.சியால் வெளியிடப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 15ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் தகுதிச் சுற்றில் விளையாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒக்ரோபர் 18ஆம் திகதி இடம்பெறும் முதலாவது போட்டியில் இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் விளையாடவுள்ளன.

இலங்கை, பப்புவா நியூ கினியா, ஓமன், அயர்லாந்து ஆகிய அணிகள் ஒரு தகுதிச் சுற்றுப் பிரிவிலும், பங்களாதேஷ், நெதர்லாந்து, ஸ்கொட்லாந்து, நமீபியா அணிகள் இன்னொரு தகுதிச் சுற்றுப் பிரிவிலும் இடம்பிடித்துள்ளன.

இந்தியா – பாகிஸ்தான் அணிகள் லீக் சுற்றில் விளையாடும் வாய்ப்பு இம்முறை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)



## சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ் அரக்கன் முத்திரை




இலங்கைத் தபால் திணைக்களத்தால் பதினெட்டு அரக்கர்கள் (துஹா அத்த சன்னிய) என்ற தலைப்பின் கீழ் 18 முத்திரைகள் வெளியிடப்பட்டன.

அதில் ஒரு முத்திரை 'தமிழ் அரக்கன்' (தெமள சன்னிய) என்ற பெயரின் கீழ் கரிய நிறமுள்ள ஒருவர் விபூதி தரித்து, குங்குமப் பொட்டு இட்டு, தலைப்பாகை போன்ற அடையாளங்களுடன் உள்ள ஒரு சித்திரத்தைத் தாங்கி வெயிடப்பட்டுள்ளது.

இந்த முத்திரை, தமிழரை அவமானப் படுத்தும் ஒரு செயற்பாடு என பலரும் கண் டனம் வெளியிட்டு வருகின்றனர்.

இலங்கையில் அண்மையில் 18 முத்திரைகள் வெளியிடப்பட்டன. அவையாவன அபூத சன்னி, (demon of madness) அமுக்க சன்னி, (demon causing fits of vomiting) வேதி சன்னி, (caused by the disturbance of bile and phlegm) வாத சன்னி, (caused by the disturbance of body wind) பீத சன்னி, (demon of fear), பிஹிறி சன்னி, (demon of deafness) கணா (கண்) சன்னி, (demon of blindness) பித்த சன்னி, (demon of bile) கோலு (செவி) சன்னி, (demon of dumbness) மூர்த்து சன்னி, (demon of unconsciousness) தமிழ்ச் சன்னி, (demon of Tamil) குல்மா சன்னி, (demon of the disease of the spleen), கோர சன்னி, (demon of lameness) கிஞ்சால் சன்னி, (demon of flames) சீதள சன்னி, (demon of shivering) நாக சன்னி, (demon of cobra) தேவ சன்னி, (demon of deity) ஆகியவைகளே ஆகும்.

சடங்குகளின்போது 'பேய்க்கென' ஒரு உருவத்தைச் செய்து, பேயோட்டும் சடங்குக ளைச் செய்வதுண்டு. அதனடிப்படையிலேயே இந்த முத்திரைகளில் ஒவ்வொரு வகையான நோய்களுக்கும் வெவ்வேறு உருவங்கள் அடையாளமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் 'தமிழ் அரக்கன்' என்ற பெயர் ஒரு நோய்க்குக் கொடுக்கப்படிருப்பதற்கான காரணம் அறியப்பட வேண்டும் என பலரும் வலியுறுத்துவதாகக் கூறப்படுகின்றது.

சில நோய்கள், அவை உருவாகும் நாடுக ளின் அல்லது மக்கள் கூட்டத்தின் பெயரால் அழைக்கப் படுவது வழக்கம். அந்தவகையில் இது தமிழர் தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நோய் என்பதினால் 'தமிழ் அரக்கன்' என பெயரிட்டிருக்கலாமெனவும் தெரிவிக் கப்படுகின்றது.

ஆனால் இந்த முத்திரை வெளியிடல் விடயத்தில் தமிழரை அடையாளமாகக் காட் டிய முறை முற்றிலும் தவறானதென பலரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பில் 'பாரம்பரிய சிங்களப் பேயோட்டும் சடங்கு' எனக் கூறப்பட்டு அதில் தமிழரின் அடையாளங்களைக் கொண்ட உருவத்தைப் பொறித்திருப்பது ஏற்றுக்கொள்ள முடியா தொன்றவெனவும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# தமிழரசுக் கட்சியின் தனித்த முடிவு தமிழ்த் தரப்பினரைப் பாதித்துள்ளது

## கூறுகிறார் அனந்தி சசிதரன்



மன்னார், நவ. 06

இலங்கைத் தமிழரசுக் கட்சி எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்காமல் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முன்வந்துள்ளமை, தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டவர்களை கேலிக்கு உள்ளாக்கும் செயல் என வடக்கு மாகாணத்தின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒருபோதும் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க முடியாது எனக் கூறப்பட்டபோதிலும் யாழ். மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் அதனை உடைத்து 6 கட்சிகளையும் ஒரே மேடையில் ஒன்றிணைத்திருந்தனர்.

அதில் 5 கட்சிகள் இணைந்து 13 கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன்வைக்கப்பட்டபோதும் அதனைப் பிரதான வேட்பாளர்கள் நிராகரித்திருந்தனர்.

இந்நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சி எந்தவிதமான கோரிக்கைகளையும் முன்வைக்காமல் புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முன்வந்துள்ளமை தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள், மதகுருமார், புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்கள் என அனைவரையும் கேலிக்கு உள்ளாக்கும் செயல் - என்றார். (ஐ)

# யாழ். பல்கலை கைலாசபதி அரங்கில் ஈரான் - இலங்கை நட்புறவுத் திரைப்படவிழா

ஈரான் கலாசார நிலையமும் யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையும் இணைந்து ஈரான் - இலங்கை நட்புறவுத் திரைப்படவிழா ஒன்றை இரண்டாவது ஆண்டாக இம்முறையும் ஏற்பாடு செய்துள்ளன.

இத்திரைப்படவிழா எதிர்வரும் 8ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

(இத்திரைப்பட விழாவில் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 'ராணாவின் மௌனம்' (Rannas' Silence) என்ற திரைப்படமும், மாலை 3.00 மணிக்கு 'வீ காவ் எ கெஸ்ற்' (We Have a Guest) என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

இரண்டாம் நாளான 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 'கொக்கற்றி' (Coquetry) என்ற திரைப்படமும், மாலை 3.00 மணிக்கு 'சீஸன் ஒவ் நர்கீஸ்' (Season of Narges) என்ற திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

சர்வதேச அளவில் வெளிவரும் தரமான திரைப்படங்களைப் பொது இரசனைத்தளத்திற்குக் கொண்டுவரும் ஓர் முயற்சியாக, இத்திரைப்பட விழா ஒழுங்குசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




# எரிவாயு தட்டுப்பாட்டால் மூடப்படும் உணவகங்கள்

கொழும்பு, நவ. 06

இலங்கையில், எரிவாயு பற்றாக் குறையினால், உணவகங்கள் மற்றும் பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 4000 ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்த எரிவாயுப் பற்றாக்குறை காரணமாகப் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு குறித்து கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சுடன் அண்மையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதன்போது கிடைக்கப் பெற்ற ஆலோசனைகளுக்கு அமைய, சம்பந்தப்பட்ட நிறுவனங்களினால் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் நேற்று முன்தினம் சமையல் எரிவாயு விநியோகம் செய்யப்பட்டது. எனினும் தொடர்ந்தும் பல பகுதிகளில் எரிவாயு பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

சவூதி அரேபியாவின் இரண்டு எரிபொருள் களஞ்சியங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆளில்லா விமானக் குண்டுத் தாக்குதலின் காரணமாக எரிவாயுவை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளமையால், கடந்த சில தினங்களில் சந்தையில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்த நிலையில், எரிவாயு தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்ததைத் தொடர்ந்து நேற்று முன் தினம் முதல் சமையல் எரிவாயு விநியோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

காலைக்கதிர்
Kalaikathir



# கிளிநொச்சியில் அதிக பனி மூட்டம்

கிளிநொச்சி, நவ. 06

கிளிநொச்சியில் நேற்று வழமைக்கு மாறாக அதிக பனி மூட்டம் காணப்பட்டமையால் மக்கள் பெரும் அசௌகரி யங்களை எதிர்கொண்டனர்.

கிளிநொச்சியில் நேற்றுக் காலை 9 மணிவரை இந்தக் காலநிலை தொடர்ந்தது. இதன் காரணமாக வேலைக்குச் செல்வோர், வாகனச் சாரதிகள், வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இம்மாத காலப் பகுதியில் இவ்வாறு பனி மூட்டம் காணப்பட்டுகின்றமை வழமைக்கு மாறான காலநிலையாகக் கருதப்படுகின்றது. (ஐ)





# சஜித் தமிழர்களை மட்டுமல்ல சிங்களவரையும் ஏமாற்றினார்

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 06

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐக்கியம் என்று தமிழில் குறிப்பிட்டுச் சிங்களத்தில் அதனை வேறு மாதிரி ஏகீயத்வய என்று குறிப்பிட்டு தமிழர்களை மாத்திரமன்றிச் சிங்களவர்களையும் ஏமாற்றியுள் ளார் சஜித் பிரேமதாஸ.

– இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

கண்டி கலகெதரவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கின் முன்னாள் முதலமைச்சர் இதனைத் தெளிவாக சொல்லியுள்ளார். சிங்களத்தில் ஒன்றும் தமிழில் ஒன்றும் ஆங்கிலத்தில் ஒன்றும் இருப்ப தால் எப்படி ஆதரவளிப்பது என்று அவர் கேட்டுள் ளார்.



தேர்தல் வாக்குகளுக்காக மக்களிடம் பொய் சொல்லக்கூடாது – என்றார். (ஐ)

# மிலேனியம் உடன்பாட்டை எதிர்த்து பிக்கு உண்ணாவிரதப் போராட்டம்

கொழும்பு, நவ. 06

மிலேனியம் சவால் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்படவுள்ள உடன்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து உடுதும்பர காஷ்யப்ப தேரர் உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

சுதந்திர சதுக்கத்திலேயே அவர் நேற்றுக் காலை முதல் இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

மிலேனியம் சவால் நிறுவனத்தின் 48 கோடி டொலர் கொடைக்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

இந்நிலையில் இந்த உடன்பாட்டுக்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வங்கக் கடலில் உருவாகும் புயல்

கொழும்பு, நவ. 06

வங்கக் கடலில் அந்தமான் அருகே உள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலசந்திரன் தெரிவிக் கையில் –

அந்தமான் அருகே உள்ள காற்ற முத்தத் தாழ்வு மண்டலம் இன்று புயலாக மாறி வட மேற்கு திசையில் வடக்கு ஒடிஷாவை நோக்கி நகரும்.

மத்திய கிழக்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப் பெற்றுள்ளது. இது தொடர்ந்து ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, இன்று இது புயலாக வலுப்பெறும்.

இதற்கு புல் புல் என்று பெயரிடப் படும். இது ஒடிஷாவை நோக்கி நகர்ந்து செல்லும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழகம் மற் றும் புதுச்சேரியில் அடுத்த 3 நாட் களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு இல்லை. அதேசமயம், லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.–என்றார்

நாளை வரை மீனவர்கள் வங்கக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண் டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள் ளது. (ஐ)

# வவுனியாவில் சஜித்தை ஆதரித்து மகளிர் மாநாடு



வவுனியா, நவ. 06

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் ஆலோசனையில் வவுனியாவில் மகளிர் ஒன்று கூடல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த மாநாடு வவுனியா தனியார் விடுதி யொன்றில் நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் பெண்கள் அமைப்பின் தலைவிகள், கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள், பெண் களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பத் தலைவிகள் மற்றும் பல பெண்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் பெண் களுக்கான பலநலத்திட்டங்கள் தொடர்பாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பாரியார் ஜலனி



பிரேமதாஸ, கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்க, இராஜாங்க அமைச் சர் விஜயகலா மகேஸ்வரன், வவுனியா நகரசபை உறுப்பினர் ஏ.ஆர்.எம் லரிப் அப்துல்பாரி, வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் றிப்கான் பதியுதீன் முத்து முகமது உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# நியூஸிலாந்து அமைச்சருடன் பிரதமர் ரணில் நேற்றுப் பேச்சு

கொழும்பு, நவ. 06

இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டுள்ள நியூஸிலாந்து நீதி அமைச்சர் என்ரூ லிட்டுலுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் சந் திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அலரிமாளிகையில் இந்தச் சந் திப்பு இடம்பெற்றதாக பிரதமரின் ஊட கப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதன்போது நாட்டின் தற்போதைய சூழ்நிலை, நடைபெறவுள்ள ஜனாதி பதித் தேர்தல், இருநாட்டுக்கும் இடை யிலான நல்லுறவை மேலும் வலுப் படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விட யங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டுள்ளது. (ஐ)

# மூதாட்டியின் சடலம் மீட்பு

*மட்டக்களப்பு, நவ. 06*

*மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள தனியார் காணியொன்றிலிருந்து வயோதி பத் தாயொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.*

*வவுணதீவு பிரதான வீதி, சுற்றுவட்டத்தின் அருகிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்தே இந்தச் சடலம் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டதாக வவுணதீவுப் பொலிஸார் குறிப்பிட்டனர்.*

*இவ்வாறு உயிரிழந்தவர், மண்முனை மேற்கு பிரதேசத் திலுள்ள ஊத்துமடு கிராமத் தைச் சேர்ந்த 80 வயதுடைய பூமணி என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள் ளார். (ஐ)*